விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 029 வள்ளுவர் ஆண்டு 2056 தை 04 வெள்ளிக்கிழமை (17.01.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# மன்னார் நீதிமன்றத்துக்கு முன்பாக துப்பாக்கிச் சூடு; இருவர் உயிரிழப்பு

- ஆபத்தான நிலையில் மேலும் இருவர் வைத்தியசாலையில் அனுமதி.
- வழக்கு விசாரணைக்காக வந்தவர்கள் மீது மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் சரமாரியாகத் துப்பாக்கிச் சூடு.
- மாட்டுவண்டிச் சவாரிப்போட்டியில் ஏற்பட்ட முறுகலையடுத்து படுகொலைக்கு பழிவாங்கல் நடவடிக்கை.

(04ஆம் பக்கம் பார்க்க)



## இலங்கையின் அபிவிருத்திக்கு அதிகபட்ச ஆதரவு வழங்கப்படும்

### சீனப் பிரதமர் லீ சியாங்

(பீஜிங்)

இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு சீனா அதிகபட்ச ஆதரவை வழங்கும் என பீஜிங்கில் நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவை சந்தித்துக் கலந்துரையாடியபோதே சீனப் பிரத



04

## துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களை உடனடியாகக் கட்டுப்படுத்துக

### மன்னார் விவகாரம் தொடர்பில் அரசிடம் சஜித் வேண்டுகோள்

(கொழும்பு)

நாட்டில் இடம்பெற்று வரும் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் நான், ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்கும் மற்றும் அனைத்துப் பாதுகாப்புப் படைப் பிரதானிகளிடமும் தயவு கூர்ந்து கேட்டுக் கொள்

15

## இரு மாணவர்கள் விபத்தில் உயிரிழப்பு

(கொழும்பு)

நொச்சியாகம, காலதிவுல்வெவப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் பாடசாலை மாணவர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

15

## ஜனாதிபதி அநுரவின் சீனப் பயணத்தால் 3.7 பில்லியன் டொலர் நேரடி முதலீடு



### அமைச்சர் பிமல் ரத்நாயக்க

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் சீனப் பயணத்தால் 3.7 பில்லியன் டொலர்கள் நேரடியாக முதலீடு கிடைக்கவுள்ளதாக அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இதற்கான ஒப்பந்தம் இலங்கை மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சுக்கும் சீனாவின்

15

## தொழில் முனைவோருக்கு நிதியமைச்சின் அறிவிப்பு

(கொழும்பு)

கடன்களைத் திருப்பிச் செலுத்த முடியாமல் சிரமங்களை எதிர்கொள்ளும் சிறு மற்றும்

15

## யாழ்ப்பாணக் கோட்டை; சங்கிலியன் பூங்கா

### அழகுபடுத்தல் தொடர்பில் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கோட்டை மற்றும் நல்லூர் சங்கிலியன் பூங்கா என்பனவற்றை அழகுபடுத்தும் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தலைமையில் ஆளுநர் செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம்

15

## 'தூய்மையான இலங்கை'

### அமெரிக்கா பாராட்டு

(கொழும்பு)

"தூய்மையான இலங்கை" திட்டத்தை வரவேற்பதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில்இடம்

16

## வடக்கு மீனவர்களுக்கு அவசர அறிவிப்பு

(கொழும்பு)

வடக்குப்பிராந்திய இலங்கை கடற்படையினர் இன்று பருத்தித்துறைக்கடலில்கடற்படைச் சூட்டுப் பயிற்சி மேற்கொள்ள இருப்பதால் மீனவர்களைக் குறித்த பகுதிக்குள் பிரவேசிக்க வேண்டாமென அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது

இலங்கை கரையோர காவல் படையின் வடக்குப் பிராந்திய பணிப்பாளர் யாழ்ப்பாணம் நீரியல்வளத் திணைக்களம் ஊடாக அனைத்துக் கடற்றொழில் சங்கங்

15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





FREE ENTRY

LOCATION:
SLIIT Northern Uni,
Arasady Road,
Kantharmadam, Jaffna

COVERING SESSIONS

1 TECH EXHIBITION
2 FACULTY MEET
3 STUDENTS INTERACTION
4 CAMPUS TOUR
5 CAREER GUIDANCE

SLIIT NORTHERN UNI OFFERED
UNDERGRADUATE DEGREE PROGRAMMES
COMPUTING | BUSINESS

APPLICATION CLOSING DATE
13TH FEB 2025

GENERAL APTITUDE TEST
15TH FEB 2025

(C-2055)

021 7534 807
northernuni.lk contactus@northernuni.com

NORTHERN UNI
EXPERIMENT. EXPERIENCE. EXCEL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பட்டதாரிகளின் கனவுகளுக்கு அரசு உயிர்கொடுக்குமா?

## யாழில் வேலையில்லாப் பட்டதாரிகள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

**வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினையையும் கோரிக்கையையும் மக்கள் மயப்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.**





குறித்த நிகழ்வானது நேற்று காலை 9.30 மணியளவில் யாழ். நகர்ப்பகுதியில் இடம் பெற்றுள்ளது.

வடக்கு மாகாணத்திலுள்ள வேலையில்லாப் பட்டதாரிகள் ஒன்றிணைந்து இந்த விழிப்புணர்வு நிகழ்வினை முன்னெடுத்துள்ளனர்.

இந்தநிலையில், ஆரம்ப நிகழ்வு உலகத்தமிழாராட்சி மாநாட்டு படுகொலை நினை வுத்தூபி முன்றலில் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகியுள்ளது.

இதனையடுத்து, யாழ். நகர்ப் பகுதிக்குள் பேரணியும் துண்டுப்பிரசுரம் வழங்கலும் இடம்பெற்றதுடன் விழிப்புணர்வு செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

பட்டம் பெற்றுவிட்டு தாங்களும் சாதாரண வேலைகளைத்தான் செய்கின்றோம் என்பதை எடுத்துக்காட்டும் முகமாக வீதியைக் கூட்டுதல், குப்பை வண்டியை தள்ளுதல் போன்ற விழிப்புணர்வு செயற் பாடுகளும் நடத்தப்பட்டுள்ளன.

வேலையில்லாப் பட்டதாரிகளின் பிரச்சினைகளையும் கோரிக்கைகளையும் மக்கள் மயப்படுத்தி தமக்கான தீர்வை பெற்றுக்கொள்ள வலுச்சேர்க்கும் நோக்குடன் இந்தச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

பட்டதாரிகளுக்கு பாரபட்சமின்றி தொழிலை வழங்கு, பட்டதாரிகளின் கனவுகளுக்கு அரசு உயிர் கொடுக்குமா? பல வருட கனவு நிறைவேற்றப் படுமா? பட்டம் வீட்டில் பட்டதாரிகள் தெருவில் என்னும் வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு, பட்டதாரிகள் அங்கிகளை அணிந்தவாறு போராட்டத்தை முன்னெடுத்தனர். (நி-33)

## இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு அழைப்பு



நிலையான, வலுவான ஆட்சி மற்றும் வெளிப்படைத் தன்மையுள்ள பொருளாதாரத்தைக் கொண்ட இலங்கையில் முதலீடு செய்ய வருமாறு சீன முதலீட்டாளர்களுக்கு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க அழைப்பு விடுத்துள்ளார்.

அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்து நேற்று ஏற்பாடு செய்திருந்த முதலீட்டு அமர்வில் கலந்துகொண்ட போதே ஜனாதிபதி இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

சீன ஜனாதிபதி சீ ஜின் பிங்கின் அழைப்பின் பேரில் சீனாவுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் விஜயத்தின் மூன்றாம் நாளுடன் இணைந்ததாக இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த மாநாட்டில் சீன டியான்யிங் இன் கோபரேசன், சீன ஹார்பர் பொறியியல் நிறுவனம், சீன தொலைத் தொடர்பு நிர்மாண கம்பெனி லிமிடெட், சீன பெட்ரோ கெமிக்கல் கூட்டுத்தாபனம், மெடலர் ஜிகல் கோபரேசன் ஒப்சைனா நிறுவனம், சீன சிவில் பொறியியல் நிர்மாணக் கூட்டுத்தாபனம், சீன எனர்ஜி இன்டர்நெசனல் குழும நிறுவனம் மற்றும் குவாங்சு பொதுப் போக்குவரத்து குழுமம் உட்பட பல முன்னணி சீன நிறுவனங்கள் பங்கேற்றன.

அந்த நிறுவனங்களின் தலைவர்களுடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுமுகமான கலந்துரையாடல்களில் ஈடுபட்டதாக ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

## இலங்கைக்கான ஆதரவை தொடர்ந்து வழங்குங்கள்

### இந்திய உயர்ஸ்தானிகரிடம் சஜித் கோரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜா மற்றும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாச ஆகியோருக்கு இடையிலான விசேட சந்திப்பொன்று கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நேற்று நடைபெற்றுள்ளது.

இதன்போது பொருளாதார, சமூக மற்றும் அரசியல் விவகாரங்கள் தொடர்பில் இருவரும் நீண்ட நேரம் கலந்துரையாடினர்.

அத்துடன் பல தசாப்தங்களாக இந்திய அரசாங்கம் இலங்கைக்கு வழங்கிய ஆதரவுக்கு இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரிடம் சஜித் பிரேமதாச நன்றி தெரிவித்தார்.

மேலும் நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடியை வெற்றிகொ



ண்டு, வங்குரோத்து நிலையில் இருந்து மீள்வதற்கான ஆதரவை தொடர்ந்து வழங்குமாறும் இந்திய உயர்ஸ்தானிகரிடம் சஜித் கேட்டுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி)


## மரண அறிவித்தல்



தோற்றம் 20 - 03 - 1928

மறைவு 16 - 01 - 2025

### இரத்னவடிவேல் வள்ளியம்மாள்

வல்வெட்டித்துறை, வேம்படி ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடாகவும் கொண்ட திருமதி இரத்னவடிவேல் வள்ளியம்மாள் நேற்று (16.01.2025) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திருச்சிற்றம்பலம் - அரியநாயகம் தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வியும் மாணிக்கம் - லெட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற மாணிக்கம் இரத்னவடிவேல் தம்பதிகளின் அன்பு மனைவியும் இரத்னவடிவேல், இராசலெட்சுமி ஆகியோரின் சகோதரியும் சிதம்பரநாயகி, சத்தியமூர்த்தி ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற சக்திவேல் மற்றும் சத்தியவாணி, தங்கவேல், மாணிக்கவாசகர், வபிஸ்டாதேவி, சிவனருட்சோதி, இரத்னசோதி, கலாவாணி ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற பிரேமகுமாரி, செந்திவேல் மற்றும் பவானி, ஜெயந்தி, மதிவண்ணன், கனகாம்பிகை, யோகசாந்தி, உருத்திரகுமார் ஆகியோரின் மாமியும் ரமேஸ், ஜெயந்தி - கலைநேசன், சுதாகர் - நிஷாந்தினி, ஜெயரூபன் - கலைமதி, உதயபானு - சிவகுமாரன், பிரதீபன் - வசந்தினி, ஜெயராம், ராகவன் - கல்யாணி, சர்மிலன், நிவேதிகா, - செனகன், நிரோஜா -ஜெயசுதன், ஐஸ்வரியா - சாந்தகுமார், பிரியங்கா - பிரதீப், பிரதீபா - சுஜீவன், கௌரி - ரகுபரன் ஆகியோரின் பேர்த்தியும் அபிநயா, சாம்பவி, சுவேகா, இலக்கியா, பிரபாகரன், அமர்நாத், யாஸ்வன், கிஷாந், ஹரினி, அட்சயா, தீஷிதன், கஜமுகன், அஜித்ரா, அபிஷனா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.01.2025) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தனக்கிரியைக்காக மாலை 4 மணியளவில் ஊறணி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

[illegible] வல்வெட்டித்துறை.

(C-2062)

தகவல்: குடும்பத்தினர்
021 226 4272


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் நீதிமன்...

மன்னார் நீதிவான் நீதிமன்றத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை காலைஇடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்ததுடன், மேலும் இருவர் படுகாயமடைந்துள்ளனர். வழக்கொன்றுக்காக நீதிமன்றத்திற்கு வருகை தந்தவர்களை இலக்கு வைத்து இந்தத் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது.இதன்போது மூன்று ஆண்கள் மற்றும் ஒரு பெண் உள்ளிட்ட நால்வர் படுகாமடைந்த நிலையில் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.வைத்தியசாலைக்குக்கொண்டு செல்லும் வழியில், படுகாயமடைந்தவர்களில் இரண்டு ஆண்கள் உயிரிழந்தனர்.

மன்னார், நொச்சிக்குளம் கிராமத்தைச் சேர்ந்த சவேரியன் அருள் (வயது61) மற்றும் செல்வக்குமார் யூட் (வயது -42) ஆகியோரே உயிரிழந்தனர். படுகாயமடைந்த ஆண் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். உயிரிழந்த இருவரும், படுகாயமடைந்த ஆண் ஒருவரும் நேற்று வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற இருந்த வழக்கு விசாரணைகளுக்காக வருகை தந்தபோதே மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டு விட்டுத் தப்பிச்சென்றார் என்று தெரியவந்துள்ளது.

மாட்டுவண்டி போட்டி தொடர்பில் மன்னாரில் உள்ள இரண்டு கிராமங்களுக்கு இடையே நிலவும் முறுகல் காரணமாக இதுவரையில் 6 பேர் உயிரிழந்துள்ளனர்.

சந்தேகநபர்கள் துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொள்வதற்கு கைத்துப்பாக்கியை பயன்படுத்தியுள்ளனர். உந்துருளியில் பயணித்தவர்களில் ஒருவர் உந்துருளியில் இருந்து இறங்கி துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நபரும், உயிரிழந்த இருவரும் 2022ஆம் ஆண்டு மன்னார் உயிலங்குளம் பகுதியில் இடம்பெற்ற இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்பது தெரிய வந்துள்ளது.

2022ஆம் ஆண்டு ஜூலை எட்டாம் திகதி உயிலங்குளத்தில் நடைபெற்ற மாட்டுவண்டி சவாரி போட்டி தொடர்பான முறுகல் ஒன்றை அடுத்து ஏற்பட்ட மோதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த இரண்டு சகோதரர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.


அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக 2023 ஆம் ஆண்டும் ஓகஸ்ட் மாதம் 23ஆம் திகதி மன்னார் அடம்பன் பகுதியில் இரண்டு பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதன்தொடர்ச்சியாகவேநேற்றுத்தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயிலங்குளம் பகுதியைச் சேர்ந்த ஜேசுதாசன் என்ற போதைப் பொருள் வர்த்தகர் ஒரு தரப்புக் கொலையுடன் தொடர்புபட்டுள்ளதாகவும் அவர் தற்போது வெளிநாட்டில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரை கைது செய்வதற்கான சர்வதேசப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# அந்தோனி ஜீவா காலமானார்



சிரேஸ்ட எழுத்தாளரும், நாடக ஆசிரியருமான மலையக இலக்கியச் சுடர் கலாபூசணம் அந்தோனி ஜீவா அண்மையில் காலமானார்.

கலாபூஷணம் அந்தோனி ஜீவா, மலையக இலக்கியங்கள் தொடர்பில் ஆய்வு செய்து பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

அவர், மலையக இலக்கியங்களுக்கு புத்துயிர் அளிக்கும் வகையில், இலக்கியங்களை தொகுத்து வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## இலங்கையின் ...

மர் இதனைத் தெரிவித்தார்.

மேலும்,ஊழலற்ற நாட்டை உருவாக்கும் தற்போதைய அரசாங்கத்தின் வேலைத்திட்டத்துக்கு சீனப் பிரதமர் பாராட்டுத் தெரிவித்தார்.

இங்குக் கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, பாஹியன் பிக்குவின் காலத்திற்கு முன்பிருந்தே சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நட்புறவு காணப்பட்டதெனக் கூறினார். (ம-7)




கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் - யாழ். கிளை நடாத்தும்

சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின்

(178வது இசை ஆராதனை விழா)

அழைப்பிதழ்

இடம் : கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கு, காரைநகர்.

காலம்: 18.01.2025 சனிக்கிழமை பி.ப 3.00 மணி

நிகழ்ச்சிகள்

- தியாகராஜ சுவாமிகள் மங்கள வாத்தியங்கள் சகிதம் அரங்கிற்கு எழுந்தருளல்
- தொடக்கவுரை
- ஈழத்து பிரபல நாதஸ்வர, தவில் கலைஞர்கள் இணைந்து வழங்கும் "மங்கள இசை"
- ஈழத்து பிரபல கர்நாடக இசைக் கலைஞர்கள் மற்றும்வாத்தியக் கலைஞர்கள் இணைந்து வழங்கும் "இசை ஆராதனை"

குறிப்பு

- நிகழ்விற்கான இலவச போக்குவரத்து சேவை கலாமன்ற யாழ். கிளையிலிருந்து பி.ப 2.30 மணிக்கு ஆரம்பமாகும். (இல.428, K.K.S வீதி, யாழ்ப்பாணம். யாழ் வண்ணை சிவன் கோயில் அருகாமை)
- மங்கள இசை மற்றும் இசை ஆராதனையில் பங்கு கொள்ள ஆர்வமும் விருப்பமும் உள்ள கலைஞர்கள் இணைந்து கொள்ளலாம்.
- தியாகராஜ சுவாமிகள் அருளிய கீர்த்தனைகளில் ஒவ்வொரு கீர்த்தனை வீதம் விரும்பிய கலைஞர்கள் தனியாக அல்லது குழுவாக இணைந்து வழங்கலாம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

கிழவன்காடு கலாமன்றம்

காரைநகர் - யாழ்ப்பாணம் (C-2060)


# கண்ணீர் அஞ்சலி

மலர்வு 1966 . 02 . 23



மறைவு 2025 . 01 . 16

அமரர் திரு.சண்முகசுந்தரம் ஸ்ரீகந்தராஜ்

(ஸ்ரீ கந்தா)

நல்லூர், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வதிவிடமாகவும் கொண்ட திரு.சண்முகசுந்தரம் ஸ்ரீகந்தராஜ் அவர்கள் நேற்று 16.01.2025 அன்று அதிகாலை இறைவனடி சேர்ந்தார்.


அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் 1/95A1 கதிராவத்தை, மட்டக்குளி கொழும்பு 15இல் 16.01.2025 பி.ப 11.00 மணியிலிருந்து பி.ப 2.00 மணிவரை வைக்கப்பட்டு நாளை 18.01.2025 சனிக்கிழமை பி.ப 3.00 மணியளவில் மாதம்பிட்டிய இந்து மயானத்தில் இறுதிக் கிரியைகள் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும் என்பதை ஆழ்ந்த அனுதாபத்துடன் அறியத்தருகின்றோம்.

இப்படிக்கு: குடும்பத்தினர்....

தொடர்புகளுக்கு:

நாகராஜ்(நாகா) - 076 569 7586

# 13ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04.05.1950

மறைவு 11.02.2012

அமரர் கந்தையா தபேந்திரன்

" தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல் "

என்ற பொய்யாமொழியான் கூற்றை உமதாக்கி
உங்களை உருக்கி எம்மை ஆளாக்கினீர்களே...
எங்கே போய்த் தேடுவோம் ஐயா... உங்கள்
கனிந்த முகத்தையும், மென் சிரிப்பையும்...

உங்கள் கொள்கைகளை மனத்திருத்தி
உங்கள் வழியில் வாழும்

(C-2058)

சாய் இல்லம்
கரவெட்டி மத்தி, கரவெட்டி.

- உங்கள் பிள்ளைகள் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பால் உற்பத்தி அதிகரிப்பால் டொலர் இழப்பை தடுக்கமுடியும்

## ஹைலண்ட் நிறுவன திறப்புவிழாவில் சந்திரசேகர் எம்.பி



(சாவகச்சேரி)

இலங்கையினுடைய பால் உற்பத்தியானது 1977 ஆம் ஆண்டிற்கு முன்னைய காலங்களோடு ஒப்பிடுகையில் பாரிய பின்னடைவைச் சந்தித்துள்ளது என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேற்று சாவகச்சேரியில் இடம்பெற்ற ஹைலண்ட் நிறுவன அங்குரார்ப்பண வைபவத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் மேற்படி தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், 1977 ஆம் ஆண்டிற்கு முன்னர் 60சதவீதமாக காணப்பட்ட இலங்கையினுடைய பால் உற்பத்தி இன்று 10 சதவீதமாக குறைவடைந்துள்ளது.

பால் இறக்குமதிக்காக எமது பணத்தை இழக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. அந்தவகையில் தற்போது பால் உற்பத்தி மற்றும் கால்நடை வளர்ப்பிற்கு அரசாங்கம் முன்னுரிமை அளித்து வருகின்றது.

அதற்குரிய கடன் வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். பால் உற்பத்தியை அதிகரிக்க நடவடிக்கை எடுப்பதன் ஊடாக டொலர் இழப்பைத் தடுக்க முடியும். அதேநேரம் தேசிய உற்பத்தியையும் அதிகரிக்க இயலும்.

அதன் ஓர் அங்கமாகவே பால் உற்பத்திப் பொருட்களை உற்பத்தி செய்யும் ஹைலண்ட் நிறுவனம் யாழில் திறக்கப்பட்டுள்ளது.

இதற்கு மக்கள் ஆதரவளிக்க முன்வர வேண்டும் என மேலும் அவர் சுட்டிக் காட்டியிருந்தார். (6-30)

# கலைத்தூது கலையகத்தில் பொங்கல் விழா கலை நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

திருமறைக் கலாமன்றம் நடத்தும் பொங்கல் விழா கலைநிகழ்ச்சிகள் நாளை சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளன. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப் படிப்புகள் பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது கலை நிகழ்ச்சிகளாக கிராமிய நடனம், ஒயிலாட்டம், "பவளத்தேர்" இசைநாடகம் போன்றவற்றுடன் "சமூக ஊடகங்கள் இன்று மக்களை அறிவுடையோராக்குகின்றன/ அடிமைப்படுத்துகின்றன" என்னும் தலைப்பிலான பட்டிமன்றமும் இடம் பெறவுள்ளது. (6)

# அறநெறி வகுப்புகள்

(யாழ்ப்பாணம்)

சைவபரிபால சபையினர் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் அறநெறி வகுப்புக்கள் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை தோறும் பிற்பகல் 3 மணி தொடக்கம் 5 மணி வரையும் பரதநாட்டிய வகுப்புகள் ஞாயிற்றுக்கிழமை தோறும் காலை 8.30 மணி தொடக்கம் 10 மணி வரை நடைபெறுகிறது.

இவ் வகுப்புக்கள் யாவும் இலவசமாகவே மேன்மை கொள் சைவநீதி நோக்கத்தில் நடைபெறுகிறது.

ஆர்வமுள்ள மாணவர்களைப் பங்கு கொண்டு பயன்பெறுமாறு யாழ். சைவபரிபாலன சபையின் செயலாளர் அறிவித்துள்ளார். (6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 200 | 200-260 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 220 | -- | 200 |
| பச்சைமிளகாய் | 900 | 1200 | 1000-1100 | 1000 |
| தக்காளி | 300 | 300 | 250 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 240 | 200-250 | 200 |
| கோவா | 200 | 200 | 200 | 300 |
| கரட் | 350 | 300 | 300 | 400 |
| பூசணி | 120 | 120 | 100 | 200 |
| புடோல் | 170 | 200 | 150 | 200 |
| வாழைக்காய் | 120 | 140 | 100-140 | 200 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 200-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 200 | -- | 300 |
| பாகற்காய் | 800 | 400 | 500 | 800 |
| வெண்டக்காய் | 200 | 300 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 120 | 120 | 200 |
| பயற்றங்காய் | 400 | 450 | 600 | 600 |
| லீக்ஸ் | 350 | 350 | 350 | 400 |
| பீற்றூட் | 400 | 500 | 450 | 600 |
| கறிமிளகாய் | 900 | 600 | 500 | 800 |
| முருங்கைக்காய் | 1800 | 4000 | -- | 2000 |
| போஞ்சி | 400 | 250 | 300 | 400 |
| கத்தரிதம்புள்ள | 200 | 180 | -- | 180 |
| கீரை – 1 பிடி | 80 | 80 | 100 | 120 |
| தேசிக்காய் | 360 | 300 | 200-250 | 250 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 240 | 100-200 | 180-220 |
| இராசவள்ளி | 600 | 600 | 400 | 400 |
| வெங்காயப்பூ | 650 | 400 | 500 | 600 |
| முள்ளங்கி | 200 | 120 | 150 | 300 |
| பொன்னாங்காணி | 80 | 80 | -- | 80 |
| வல்லாரை | 60 | 70 | -- | 80 |
| ஈரப்பலா | 100 | 80 | 100 | 200 |

# இராசிபலன்

17.01.2025
தை 04, வெள்ளிக்கிழமை
சதுர்த்தி முழுவதும்
மகம் பிற்பகல் 2.19 மணிவரை
மணிவரை
இராகுகாலம் 11.05-12.35 மணிவரை
சங்கட கர சதுர்த்தி விரதம்
சந்திராஷ்டமம் -

வளவன்

**மேஷம்** வழிபாடு காரிய வெற்றி தரும், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சுய முயற்சிகள் மூலம் சுகம் காணும் நாள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும்.

**ரிஷபம்** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் கூடும், சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், பயணங்களால் பலனுண்டு.

**மிதுனம்** உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொலைதூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், பணத்தேவைகள் பூர்த்தியாகும், ஆன்மீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்** குடும்பத்தில் சுமைகளும் பொறுப்புக்களும் கூடும், அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், திடீர் பயணங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

**கன்னி** விரதங்களில் நம்பிக்கை கூடும், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், சுப விரயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**துலாம்** செல்வநிலை உயரும் நாள், ஆடம்பரப் பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், திடீர் பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**விருச்சிகம்** பொது நல ஈடுபாடு அதிகரிக்கும், உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வரலாம், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், கௌரவமான நாள்.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**மகரம்** உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும் நாள், வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.

**கும்பம்** மகிழ்ச்சி தரும் அனுபவங்கள் ஏற்படலாம், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும், எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.

**மீனம்** திறமைகள் வெளிப்படும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், முயற்சிகள் கைகூடும்.

அன்புள்ள இதயம் என்றும் இளமையாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈர்ப்புக் கோட்பாட்டுப் பரிணாமம்; நியூட்டன் முதல் ஐன்ஸ்டீன் வரை

அறிவியல் மிகவும் தொன்மையான தொரு துறை. அதனை ஒரு கற்கை என்பதை விட இயற்கையின் மொழி என்று கூறலாம். சிறுபிள்ளைகள் கேட்கும் மழலை கேள்விகளிலும் அவை காணப்படும். அதற்கு விடை தெரியாது விழிக்கும் தந்தைகளின் தவிப்பிலும் அவை காணப்படும். நம்மை சூழ நிகழும் அத்துனை அம்சங்களிலும் அவை காணப்படும். இத்தகைய அறிவியல் பற்றிய அடிப்படை அறிவு பாமரன் தொட்டு படித்தவன் வரை இன்றியமையாததொன்றாகிறது. பூமி ஏறக்குறைய கோளவடிவிலிருந்தும் (Spheroid) உயிரினங்கள் விழாது பூமியில் நிலைத்திருப்பது எவ்வாறு? என்ற கேள்வியை நம்மை நோக்கி யாராவது தொடுத்தால் ஒரே வரியில் ஈர்ப்புவிசையால் என்று பதிலளித்திட முடியும். ஈர்ப்பு விசை என்பது கவர்ச்சி விசை என்ற அளவில் எல்லோரும் அறிந்ததே! ஆனால் 1380 கோடி வருடங்களுக்கு முன் பெருவெடிப்பு (Bigbang) மூலம் அண்டம்தோன்றியது முதல் இன்றுவரை அண்டத்தின் பெருவீத கட்டமைப்பை தீர்மானிக்கும் ஈர்ப்புவிசை (Gravity) பற்றி நம்முடைய புரிதல் எந்தளவில் வியாபித்திருக்கிறது?

அண்டமானது தோன்றுவதற்கு முன் காலம் (Time), வெளி (Space) என்பவற்றுக்கு அர்த்தம் இருக்கவில்லை. அதாவது அவை தோன்றியிருக்கவில்லை. இந்நிலையில் இயற்கை, அண்டத்தின் தோற்றத்திற்கு பல்லாயிரம் வழிகள் இருக்க பெருவெடிப்பை தேர்வுசெய்தது. அத்தோடு அண்டத்தை ஆளும் விதிகளையும் அடிப்படை விசைகளையும் தேர்வு செய்தது. அப்படித் தேர்வு செய்யப்பட்ட அடிப்படை விசைகள் வலிமையான அணுக்கரு விசை, வலிமைகுன்றிய அணுக்கரு விசை, மின்காந்தவிசை, ஈர்ப்புவிசை என நான்கு. விசை என்பது துணிக்கைகளின் இயக்க மாற்றத்திற்கு காரணமாக அமைவது அதாவது இயங்கச்செய்வது, இயங்க எத்தனிக்கச் செய்வது, நிறுத்துவது, நிறுத்த எத்தனிப்பது. அதனால் தான் அண்டம் தேர்வு செய்த நான்கு விசைகளையும் அடிப்படை விசைகள் என்கிறோம். அதன் பொருள் அண்டத்தினுள் நிகழும் அனைத்து இயக்கமாற்றங்களையும் இவ்விசைகளின் மூலமே விளக்கலாம். இது தவிர்த்து ஐந்தாவதாகவும் ஒரு விசை இருக்கலாம் என்ற ஊகமும் சில பௌதீகவியலாளர்கள் (Physicist) மத்தியில் நிலவுகிறது. இப்போதைக்கு அது ஊகமாகவே காணப்படுகிறது. ஆக அண்டத்தினுள் நிகழும் எல்லா மாறுதல்களையும் அடிப்படை விசைகள் எனும் நான்கு சுவர்களுக்குள் அடக்கி விடலாம். அடிப்படை விசைகளைப் புரிந்து கொள்ள 1380 கோடி ஆண்டுகள் (அண்டத்தின் வயது) முன்னோக்கி காலப்பிரயாணம் செய்திருந்தோம். இவ்வடிப்படை விசைகளின் இடைக்கவர்ச்சியால் அடிப்படைத் துகள்களிலிருந்து அணுக்கள் தோன்றின. அணுக்களிலிருந்து மூலக்கூறுகள் தோன்றின. மூலக்கூற்று முகில்களிலிருந்து (நெபியூலா) கோள்களும் நட்சத்திரங்களும் தோன்றின. இவ்வாறு தான் அண்டம் தோன்றியது. இது அண்டத்தோற்றத்தில் அடிப்படை விசைகள் நான்கினதும் பங்கு.

ஆனால் பெரும்படி அளவு மட்டத்தில் (Macro scale) ஈர்ப்புவிசைதான் தீர்மானிக்கும் சக்தி. கோள்கள், உடுக்கள் உட்பட எல்லா வான்பொருட்களின் தோற்றம், வடிவம், சுற்றுவட்டப் பாதை, அலைவு காலம் என்பவற்றை தீர்மானிப்பது ஈர்ப்பு விசை தான். இத்தனைக்கும் மேலே கூறிய நான்கு அடிப்படை விசைகளிலும் மிக பலவீனமான விசை ஈர்ப்பு விசை தான்.

ஈர்ப்பு விசை பற்றி நாம் ஆராய தொடங்கியது எப்போது?

இந்தக் கேள்விக்கு விடை காண இன்றிலிருந்து 460 கோடி ஆண்டுகள் முன்னோக்கி செல்வோம். எச்சரிக்கை இப்போது பூமி தோன்ற இருப்பதால் இங்கு பெரிய மோதல் (Giant impact) இடம்பெற இருக்கிறது. செவ்வாய் அளவு வான் பொருளானது, கயா (Gia - 460 கோடி ஆண்டுகளுக்கு முன் பூமியின் நிலை) உடன் மோதி நமது பூமியும், சந்திரனும் தோன்றுகிறது. பல கோடி வருடங்களின் பின் உயிரினத் தோற்றம் இடம்பெற்றது. மனிதன் தோன்றினான். நாகரிகங்கள் தோற்றம் பெற்றன. பாபிலோனிய, சுமேரிய நாகரிகம், எகிப்திய நாகரிகம், சிந்துவெளி நாகரிகம் அவற்றுள் முதன்மையானவை. ஐயாயிரம் வருடங்களுக்கு முன் இந் நாகரிகங்கள் தோற்றம் பெற்றன. நாகரிகங்கள் தோற்றம் பெற்றதிலிருந்து இயற்கையைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் வைத்து அவதானிப்பதை மனிதன் அதிருப்தியுற்றான். ஆரம்பத்தில் மனிதன் வானத்தில் உள்ள பொருட்களை கண்டு பயமுற்றான். அவற்றுக்கு தெய்வீக அந்தஸ்து வழங்கினான். வணங்கினான். படிப்படியாக சூரியன், சந்திரன் என்பன ஒரு தொடர்ச்சியான ஒழுங்கில் மாறி மாறி தோன்றுவதை அவதானித்தான். உன்னிப்பாக அவதானிக்கக் கற்றுக்கொண்டான். அவ் அவதானங்கள் வான்பொருட்களுக்கு வழங்கிய தெய்வீக அந்தஸ்தை இல்லாமற் செய்தது. பின் காலநிலை மாற்றம், பயிர் விளைச்சலை வான்பொருள்களின் துணை கொண்டு புரிய ஆரம்பித்தான். இவ்வாறு படிப்படியாகத் தான் வானவியல் (Astronomy) வளர்ச்சியுற்றது. பின் எழுத்து, கணித அறிவுகள் தோற்றம் பெற்றன. மேற்சொன்ன நாகரிகங்களை அடுத்து கிரேக்க நாகரிகம் இன்றைக்கு ஏறத்தாழ 2500 வருடங்களுக்கு முன் அறிவுகளின் கருவூலமாய் திகழ்ந்தது. அரிஸ்டோடில் அக்கருவூலத்தின் முக்கியமானதொரு பொக்கிஷம். பொருட்களின் விழுகையை அவதானித்த அரிஸ்டோடில், அப்போது அண்டத்தின் மையமாக கருதப்பட்ட பூமியின் மையத்தை நோக்கி பொருட்கள் இயல்பான நாட்டத்தை கொண்டுள்ளன என்றார். பொருட்களின் உள்ளார்ந்த ஆற்றல் சார்ந்தது என்றார். பாரமான பொருட்கள் இதன் காரணமாக பாரம் குறைவானவற்றை காட்டிலும் விரைவாக பூமியை அடையும் என்றார். சுமார் 2000 ஆண்டுகள் அதாவது 16 ஆம் நூற்றாண்டு வரை இது ஒரு விதியாகவே பார்க்கப்பட்டது, கலிலியோ கலிலி வரும் வரை. கலிலி பரிசோதனை மூலமாக அரிஸ்டோடிலிஸத்தின் இயக்கவியல் கருத்துக்களை மாற்றியமைத்தார். பைசா சாய் கோபுரத்திலிருந்து வெவ்வேறு பவுண்டு திணிவுகளை சமவுயரத்திலிருந்து விழ வைத்து அவதானித்ததாக சொல்வதுண்டு. ஆனால் அதற்கு நிகராக ஒப்பமான சாய்தள அமைப்பை ஏற்படுத்தி வெவ்வேறு திணிவுகள் ஒரே உயரத்திலிருந்து தரையை அடையும் நேரத்தை கணக்கிட்டார். யாவும் ஒரே நேரமாக இருந்தது. அப்படியானால் நாணயக்குற்றி, இறகு என்பவற்றின் கீழ் நோக்கிய வீழ்கை ஒரே நேரத்தை எடுப்பதில்லையே? என்ற கேள்வி உங்களுக்கு எழலாம். நிதர்சனமான கேள்வி தான்.


இதற்கு காரணம் இறகு மீதான வளித்தடை அதிகமாக இருப்பதே. கலிலியோவின் முடிவுகள் வளித்தடை புறக்கணிக்கத்தக்க அளவில் இல்லாத நிலையிலேயே செல்லுபடியாகும். இப்பரிசோதனையை நிலவிற்கு சென்றதாக நம்பப்படும் நாசாவின் அப்பலோ-15 கொமாண்டர் டேவிட்ஸ் கொட் கூட நிலவில் நிறுவிக்காட்டியது போன்ற காணொளிகள் உள்ளன. இல்லாத பட்சத்தில் மூடிய கொள்கலனில் உள்ள வளியே உறிஞ்சி அகற்றிய பின் நாணயக் குற்றி, இறகு என்பவற்றை ஒரே உயரத்திலிருந்து விழ வைத்து நாம் கூட உறுதி செய்து கொள்ளலாம். கலிலியோவினை மீள பார்க்கச் செல்லலாம். கலிலியோ சுயாதீன வீழ்கை பரிசோதனையிலிருந்து ஒரே உயரத்திலுள்ள பொருட்கள் பூமியை ஒரே வீதத்தில் வந்தடைகின்றன என்ற முடிவுக்கு வந்தார். அதாவது புவியீர்ப்பின் கீழ் எல்லா பொருளினதும் ஆர்முடுகல் புவிப்பரப்பில் ஒரேயளவாக இருக்கிறது என்ற முடிவுக்கு வந்தார். அதனை கணிப்புகள் மூலம் உறுதியும் செய்தார். கலிலியோவின் பரிசோதனை முடிவுகள் அவரையடுத்து வந்த நியூட்டனுக்கு ஈர்ப்பு விசையை ஒரு வரையறைக்குட்படுத்தி நெச்சுராலிஸ் ப்ரின்ஸிபியா மெதமடீஸியா (Philosophiae Naturalis Principia Mathematica) என்ற அவரது நூலில் ஈர்ப்புக் கோட்பாடை வெளியிட துணைசெய்தது. நியூட்டனின் தலையில் விழுந்ததாக கூறப்படும் அப்பிள் வெறும் கட்டுக்கதையே (Apocryphal apple). நியூட்டனிற்கு அப்பிள் அகத்தூண்டுதலாயிருக்கலாம் ஆனால் அவர் தலையில் விழுந்தது என்னமோ கட்டுக்கதை தான். நியூட்டன் அண்டத்திலுள்ள ஒவ்வொரு துணிக்கையும் மற்றைய துணிக்கைகளை கவரும் என்றார். இந்தக் கவர்ச்சி அவ்விரு பொருள்களின்/துணிக்கைகளின் திணிவு அதிகரிக்கும் போது அதிகரிக்கும் குறையும் போது குறையும் அத்தோடு அவற்றிற்கு இடையான தூரம் கூடும் போது கவர்ச்சி குறையும், தூரம் குறையும் போது கவர்ச்சி கூடும். இதுவே நியூட்டனின் ஈர்ப்புவிதியாகும். உதாரணத்திற்கு இப்பத்திரிகையை வாசிக்கும் நீங்கள் பத்திரிகையை உங்களை நோக்கி கவர்வீர்கள், அதே சமயம் பத்திரிகையும் அதை நோக்கி உங்களை கவரும். இதே போல உங்களை சூழவுள்ள எல்லாவற்றையும் நீங்கள் கவர்வீர்கள், அதே சமயம் அந்த பொருட்களும் உங்களை அவற்றை நோக்கி கவரும். இந்த ஈர்ப்பு கவர்ச்சி மிகவும் நலிவானதாகையால் இதனை நம்மால் உணரமுடிவதில்லை. இதேவேளை உணரக்கூடிய ஈர்ப்புவிசையாக நமது நிறையை கூறலாம்.

$5.9\times10^{24}$ kg கிலோகிராம் திணிவு கொண்ட ஏறக் குறைய கோளவடிவான புவி நம்மை கவர் வதை நாம் நிறையாக உணர்கிறோம். இதேபோல் புவிக்கவர்ச்சியால் வாயு மூலக்கூறுகள் கவரப்பட்டு இருப்பதாலேயே எம்மால் சுவாசிக்க தேவையான வளிமண்டலத்தை பெறமுடிந்திருக்கிறது. ஆனால் சந்திரன், புதன் போன்றவற்றின் கவர்ச்சி விசை குறைவாகையால் வாயு மூலக்கூறுகள் தப்பிச் சென்று விடுகின்றன. இதனால் அங்கு குறிப்பிடத்தக்க அளவு கூட வளிமண் டலம் காணப்படுவதில்லை. இது சந்திரன் மீது விழும் எரிகற்களுக்கும் சாதகமாக அமைய அழிக்கபடாத நிலையில் எரிகற்கள் சந்திரன், புதன் போன்றவற்றை மோதுவதாலேயே அங்கு பள்ளங்கள் காணப்படுகின்றன, அப்பள்ளங்களுக்கும் விஞ்ஞானிகளின் பெயர்களை சூட்டமுடிகிறது. சூரியனை போன்ற நட்சத்திரங்களை கோள்களும் இன்னபிற வான்பொருட்களும் சுற்றி வருவதும், கோள்களை இயற்கை செய்மதிகள் (நிலாக்கள்), செயற்கை செய்மதிகள் சுற்றிவருவதும் ஈர்ப்பு விசை எனும் மாயக் கயிற்றினால் தான். ஈர்ப்பு செய்மதிகளை பூமிக்கு மேல் சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தவும் அதன் மூலம் தொலைத்தொடர்பு, காடு பாதுகாப்பு, வானிலை நிலவரம் என்பவற்றை முன்கூட்டி அறிய உதவுவதால் அழிவுகளிலிருந்து பாதுகாக்க முடிவதுடன், பொருளாதார ரீதியிலும் மக்களின் வாழ்வை முன்னேற்ற முடிந்திருக்கிறது. இவ்வாறு அண்டத்தின்கட்டமைப்பின்பெரும் பகுதியை நிர்ணயிக்கும் காரணி ஈர்ப்பு விசை எனும் அடிப்படை விசை தான். ஆனால் நியூட்டனின் ஈர்ப்பு விதியின் எதிர்வுறல் சில இடங்களில் தவறானது. உதாரணத்திற்கு புதன் கோளின் சுற்றுவட்டபாதையை துல்லியமாக எதிர்வு கூறலில் நியூட்டனின் ஈர்ப்பு விதி தவறியது. எதிர்வுகூறல் சுற்றுவட்டப் பாதைக்கும் உண்மையான சுற்றுவட்டப் பாதைக்கும் இடையில் வேறுபாடு காணப்பட்டது. இது ஈர்ப்புவிசை பற்றி இன்னும் நாம் புரியாத பக்கங்களை கொண்டிருப்பதை உணர்த்தியது. இவ்வேறுபாட்டை களைவதில் ஐன்ஸ்டீனின் ஈர்ப்புக்கோட்பாடு வெற்றி கண்டது. ஐன்ஸ்டீன் 1915 இல் வெளியிட்ட பொதுச்சார்பியல் (General Relativity) ஈர்ப்புக் கோட் பாட்டை கேத்திர கணித கட்டமைப்புக்குள் கொண்டு வந்தது.

கால-வெளியில் (Space-time) ஏற்படும் வளைவின் விளைவாக ஈர்ப்பை விளக்கலாம். அதாவது கால-வெளியை ஒரு பாயாக எடுத்துக்கொள்வோம். இப்போது அதன் நடுவில் பாரமான திணிவொன்றை இடும் போது திணிவை சுற்றி பாயின் பரப்பு வளையும். இப்போது ஒரு சிறிய பந்தை பாயின் ஓரத்திலிருந்து விடும் போது அது திணிவை நோக்கி செல்லும். இதே சமயம் அந்த திணிவை ஒரு கிடை வேகத்தோடு விடும் போது உராய்வின் காரணமாக அது வட்டபாதை குறுகி இறுதியில் திணிவை அடையும். உதாரணத்திற்கு இவ்வாறே சூரியனை பூமி சுற்றிவருவதும். சூரியன் வளைக்கும் கால-வெளிப்பரப்பில் பூமி சுற்றி வருகிறது. ஐன்ஸ்டீனின் ஈர்ப்புக் கோட்பாடு பரிசோதனை ரீதியிலும் உறுதி செய்யப்பட்டது. சூரிய கிரகணம் வானியல் ஆய்வுகள் பலவற்றுக்கு வானியலாளர்கள் காத்துக்கொண்டிருக்கும் தருணம். அவ்வாறான வேளையில் ஈர்ப்பு வில்லை விளைவு (Gravitational lensing) அவதானிக்கப்பட்டது.

அதாவது சூரியனுக்குப் பின்னுள்ள நட்சத்திரத்திற்கு இரு விம்பங்கள் பெறப்பட்டன. சூரியன் எனும் மகா பெரிய அசுரன் கால-வெளியை வளைப்பதால் ஐன்ஸ்டீனின் ஈர்ப்புக் கோட்பாட்டால் நாம் நியூட்டனின் ஈர்ப்பு விதியை நிராகரித்துவிடவில்லை ஏனெனில் ஐன்ஸ்டீனின் கணக்கியல் மிகவும் சிக்கலானவை. இதனால் சார்பியக்க மற்ற கேள்விகளுக்கு நாம் இன்னும் நியூட்டனின் ஈர்ப்பு விதியிலேயே தங்கியிருக்கிறோம் அது கணக்கீடுகளுக்கு எளிதானதாகையால். குவாண்டம் இயக்கவியலின் விரிவாக்கத்திற்கு பின் முன்னமே சொன்ன நான்கு அடிப்படை விசைகளில் ஈர்ப்பு தவிர்ந்த மூன்று அடிப்படை விசைகளையும் குவாண்டம் புலத்தினுள் வைத்து விளக்க முடிந்தது. தனித்திருப்பது ஈர்ப்பு விசை மட்டுமே. அதையும் குவாண்டம் புலத்தினுள் கொண்டுவர க்ரேவிடோன் (Graviton) என்ற கற்பனை துகள் எண்ணக் கருவை சிருஸ்டித்தார்கள். தேடல் இன்னும் ஓய்ந்தபாடில்லை. குவாண்டம் ஈர்ப்பு (Quantum gravity) கொள்கையென மடை திறந்து செல்லும் இத் தேடல் பெருநதி நிற்கப்போவதில்லை அண்டத்தை அதன் வடிவில் புரிந்துகொள்ளும் வரை.

அப்துல்லாஹ் முஹம்மது ஆதில்,
செயன்முறை வழிகாட்டுநர்,
பௌதிகவியற்றுறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.



## யாழ்ப்பாண விஞ்ஞான சங்க A பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலை எண்ணெய் குதங்கள்

## அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

### வலுசக்தி அமைச்சர் ஜயக்கொடி



(திருமலை)

இந்தியா மற்றும் இலங்கையுடன் இணைந்து நிறுவப்பட்ட ட்ரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் லிமிடெட் நிறுவனம் மூலம் திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை எண்ணெய்க் குதங்கள் வளாகத்திற்கான கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டதன் பின்னர், ஊடகங்கள் மத்தியில் உரையாற்றிய போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

புதிய அரசாங்கத்தின் வலுசக்தி கொள்கை மற்றும் திட்டத்திற்கு இணங்க, திருகோணமலையில் உள்ள எண்ணெய்க் குதங்கள் மூலம் நாட்டிற்கு அதிக அளவு அந்நிய செலாவணியை ஈட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கையுடன் இணைந்து நிறுவப்பட்ட ட்ரின்கோ பெட்ரோலியம் டெர்மினல் லிமிடெட் நிறுவனத்தின் கீழுள்ள 61 குதங்களில், 4 குதங்கள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். (நி)

## குருநகரில் சுற்றிவளைப்பு ஆறு சந்தேக நபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குருநகர் பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திடீர் சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டிருந்தனர்.


குறித்த நடவடிக்கையின் போது, போதைப்பொருட்கள் சிலவற்றை மீட்டுள்ளதுடன், குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகத்தில் ஆறு பேரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரை பொலிஸ் காவலில் தொடர்ந்து தடுத்து வைக்க நீதிமன்ற அனுமதியை பெற்றுள்ள பொலிஸார் அவரை தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, ஏனைய ஐவரையும் விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கைகளை எடுத்துள்ளனர். (6-33)

## அதானி நிறுவன காற்றாலை மின்திட்டம்

### வழக்கு விசாரணை ஒத்திவைப்பு



(கொழும்பு)

மன்னார், விடத்தல் தீவு பகுதியில் இந்திய அதானி நிறுவனத்தினால் காற்றாலை மின் நிலையத்தை உருவாக்கும் திட்டம் தொடர்பில் செய்து கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச் செய்யக் கோரி, தாக்கல் செய்யப்பட்ட ரிட் மனுவை மே 23 ஆம் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ள மேல்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டது.

குறித்த மனுவை இலங்கை பசுமை அமைப்பின் தலைவர் சந்திம அபயவர்தன தாக்கல் செய் துள்ளார்.

இந்நிலையில் இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி எம். யூ.பி. கரலியத்தவினால் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

அப்போது, இந்தத் திட்டம் தொடர்பான பல முக்கியமான வழக்குகள் அடுத்த மார்ச் மாதம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வரவுள்ளதாக அரச சட்டத்தரணி தெரிவித்தார். இந்தத் திட்டம் தொடர்பாக இறுதி முடிவு எடுக்கப்பட வில்லை என்றும் அவர் நீதி மன்றத் திற்குத் தெரிவித்தார்.

அதன் பின்னர், சம்பந்தப்பட்ட மனுவை மே 23 ஆம் திகதி பரிசீலிப்பதாக நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (நி)


## பெறுகை அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை

தலைவர் பெறுகைக் குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை அவர்களினால் 16.02.2025ஆம் திகதி தொடக்கம் 15.08.2025ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையில் கீழ்வரும் சேவைகளை வழங்குவதற்கு தகைமையுள்ள சேவை வழங்குநரிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | சேவை | ஆளணி எண்ணிக்கை | பெறுகை பிணை வைப்பு(ரூபா) | |
|---|---|---|---|---|
| | | | தொகை | காலம் |
| NP/14/45(3)/1/OS/2025/02 | சுகாதாரச் சேவை | 06 | 18,000.00 | 16.05.2025 |

1. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாகவே இக்கேள்வி கோரப்படுகின்றது.
2. தனியார் சேவை வழங்குநர்கள் சேவை வழங்கலுக்கான வியாபாரப் பதிவுடைய ஒரு நபராகவோ அல்லது ஒரு நிறுவனமாகவோ இருத்தல் வேண்டும் என்பதுடன் குறைந்தது 02 ஆண்டுகள் இச்சேவையை வழங்கியதற்கான அனுபவம் இருத்தல் வேண்டும்.
3. சேவை வழங்குநர்களின் தலைமைக்காரியாலயம் அல்லது கிளைக் காரியாலயம் யாழ்ப்பாணம் அல்லது கிளிநொச்சி மாவட்டங்களில் அமைந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் தலைவர், பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை, தொலைபேசி இலக்கம் **024 324 3544** தொலைநகல் **021 205 0036** மின்னஞ்சல் **pallaips@gmail.com** இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் **17.01.2025 தொடக்கம் 31.01.2025ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை** பெறுகை ஆவணங்களைப் பார்வையிடலாம்.
5. சேவை வழங்குநர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் அலுவலக நாட்களில் **17.01.2025** தொடக்கம் **31.01.2025ஆம் திகதி மு.ப 09.00 முதல் 15.00 மணிவரை** மீளளிக்கப்படாத பெறுகைப் படிவக் கட்டணமாக **ரூபா 2,000.00 (VAT,NBT நீங்கலாக)** இனைச் செலுத்தி பெறுகை விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளமுடியும்.
6. கேள்வி ஆவணங்கள் 03.02.2025 **ஆம் திகதி மு.ப 10.30 மணிக்கு** முன்பதாக கிடைக்கக் கூடியவாறு **தலைவர், பெறுகைக்குழு, பிரதேச சபை,** பளை எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது அலுவலகத்தில் உள்ள பெறுகைப் பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது, கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
7. பெறுகைப் பத்திரம் உள்ளடங்கிய கடித உறையின் **இடது பக்க மேல் மூலையில் பெறுகை இலக்கம்** எழுதப்படல் வேண்டும்.
8. பெறுகைப்பத்திரங்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்.
9. கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள்பெறுகைக் கோரலை கோருவதற்கும் பெறுகைக்குழுத் தலைவருக்கு அதிகாரம் உள்ளது.
10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் **23.01.2025ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு** பச்சிலைப்பள்ளி பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்தச் செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**திருமதி.தர்சினி தயானந்தன், தலைவர்,பெறுகைக்குழு,**
**பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை,** (பி-2052) **2025.01.17**


## மானிப்பாய் பிரதேசசபையில் வாசிப்பு மாத பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி யீட்டியவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 1.30 மணியளவில் வலிகாமம் தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபையின் ரவீந்திரன் கலாசார மண்டபத்தில் சபையின் செயலாளர் சீ.சபேசன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன் சிறப்பு விருந்தினர்களாக இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தின் விரிவுரையாளர் ந.செல்வானந்தராசா, யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி அதிபர் திருமதி மலர்விழி குணபாலன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் இந்த நிகழ்வில் வாசிப்பு சம்பந்தமான கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளன. (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

# கூடுதல் வரிகளை திணித்தால் விளைவுகள் கடுமையாக இருக்கும்

## அமெரிக்காவை எச்சரித்த கனடா



(ஒட்டாவா)

கனடா மீது கூடுதல் வரிகளை விதித்தாலோ அல்லது கனடாவை அமெரிக்காவின் 51 ஆவது மாகாணமாக மாற்ற அழுத்தம் தந்தாலோ அமெரிக்கா கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என கனடா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியாக பதவியேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் அண்மையில் கனடா, பனாமா கால்வாய் மற்றும் கிரீன்லாந்தை கையகப்படுத்த வேண்டும் எனத் தெரிவித்திருந்தார்.

இதன்போது குறிப்பாகக் கனடாவை அமெரிக்காவுடன் இணைக்க வேண்டும் என்றும் கனடாவிற்கு கூடுதல் வரி விதிக்கப்படுமெனவும் தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் டொனால்ட் ட்ரம்ப் கனடாவின் பொருட்களுக்கு எதிராக கூடுதல் வரி விதிக்க முடிவு செய்தால் அமெரிக்காவால் உற்பத்தி செய்யப்படும் பொருட்களுக்கு கடுமையான வரி விதிக்கப்படுமென கனடா எச்சரித்துள்ளது.

இந்நிலையில் ஒவ்வொரு வருடமும் கனடா அமெரிக்காவிற்கு கணிசமான அளவு கச்சா எண் ணெய் இயற்கை எரிவாயு மற்றும் மின்சாரத்தை வழங்கி வருகிறது.

குறிப்பாக 2024 இல் கனடா ஒரு நாளைக்கு சுமார் 2.76 மில்லியன் பீப்பாய்கள் கச்சா எண்ணெயை அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்தது. இது அமெரிக்க கச்சா எண்ணெய் இறக்குமதியில் 60% ஆகும். அந்த அளவிற்கு அமெரிக்கா கனடாவை நம்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# செயற்கைக்கோள் இணைப்பில் சாதனை படைத்த இந்தியா



(டில்லி)

விண்வெளியில் இரண்டு செயற்கைகோள்களை இணைக்கும் "டாக்கிங்" செயல்முறை வெற்றி பெற்றுள்ளதாக இஸ்ரோ நேற்று அறிவித்துள்ளது. இதன்மூலம் செயற்கைக்கோள்களை விண்வெளியில் இணைத்த 4 ஆவது நாடு என்ற சாதனையை இந்தியா படைத்தது.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்டுள்ள எக்ஸ் தளப்பதிவில் "விண்கலன்களை இணையச் செய்யும் வரலாற்று நிகழ்வு வெற்றி பெற்றுள்ளது. விண்வெளியில் டாக்கிங் செய்த 4வது நாடு இந்தியா," எனக் குறிப்பிட்டுள்ளது.


ரஷ்யா, அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து செயற்கைக்கோள்களை விண்வெளியில் இணையச் செய்த 4ஆவது நாடு என்ற சாதனையை இந்தியா படைத்துள்ளது.

சரித்திர சாதனை படைத்த இந்திய விஞ்ஞானிகளுக்கு இஸ்ரோ புதிய தலைவர் நாராயணன் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தார்.

சர்வதேச விண்வெளி மையத்தைப் போல வரும் 2035ஆம் ஆண்டுக்குள் தனி விண்வெளி மையத்தை அமைக்க இந்தியா முயற்சித்து வருகிறது. மேலும் ககன்யான் திட்டத்தின் மூலம் விண்வெளிக்கு வீரர்களை அனுப்பும் திட்டப் பணிகளும் இறுதிக்கட்டத்தில் உள்ளன. (நி-6)

# காசா...

# மறு...



இஸ்ரேலும் ஹமாஸும் காசா பகுதியில் பேரழிவு தரும் போரை இடைநிறுத்த ஒப்புக்கொண்டதாக அமெரிக்காவும் கட்டாரும் ஒப்பந்தத்தை அறிவித்த சில மணிநேரங்களுக்குப் பின்னர் நெதன்யாகுவினால் இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இது குறித்த ஒரு அறிக்கையில் நெதன்யாகு தெரிவிக்கையில், தற்போது ஒப்பந்தம் தொடர்பான பணிகள் நடந்து வருவதாகவும் இறுதி விபரங்கள் கலந்தாலோசிக்கப்பட்ட பின்னரே முறையான பதிலை வெளியிடுவேன் என்று கூறினார்.

இதனிடையே பாலஸ்தீனிய கைதிகள்

# ஊழல் வழக்கில் கைதான கலிதா ஜியா விடுதலை

(டாக்கா)

ஊழல் வழக்கில் பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் கலிதா ஜியா விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பங்களாதேஷ் பிரதமராகப் பதவி வகித்த கலிதா ஜியா ஆட்சிக்காலத்தின்போது அவரது கணவரான மறைந்த ஜியாவுர் ரஹ்மான் பெயரால் இயங்கி வரும் அறக்கட்டளைக்காக வெளி நாடுகளில் இருந்து முறைகேடாக சுமார் இரண்டரை இலட்சம் அமெரிக்க டொலர்கள் நன்கொடையாகப் பெற்று கலிதா ஜியா தனது பதவி அதிகாரத்தைப் பயன்படுத்தி மிகப் பெரிய நிதி மோசடியில் ஈடுபட்டது தெரியவந்தது.

இதனையடுத்து கலிதா ஜியா அவரது மகன் தாரிக் ரஹ்மான் உள்ளிட்ட 6 பேர் மீது குற்றம்சாட்டப்பட்டது. வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம் கலிதா ஜியாவுக்கு 5 ஆண்டு சிறை தண்டனையும் மற்ற வர்களுக்கு 10 ஆண்டு கடுங்காவல் தண்டனையும் விதித்தது.

இதை எதிர்த்து கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரும் ஐகோர்ட்டில் மேல்முறையீடு செய்தனர். ஆனால் மேல்முறையீட்டு மனுவை விசாரித்த ஐகோர்ட் கலிதா ஜியாவுக்கான தண்டனையை இரட்டிப்பாக அதிகரித்து உத்தரவிட்டது. இதையடுத்து சுப்ரீம் கோர்ட்டில் கலிதா ஜியா அப்பீல் செய்தார்.

இந்நிலையில் இந்த வழக்கின் விசாரணை நிறைவடைந்த நிலையில் ஐகோர்ட்டின் முந்தைய உத்தரவான 10 ஆண்டு சிறைத்தண்டனையை சுப்ரீம் கோர்ட் ரத்துசெய்து உத்தரவிட்டது.

அத்துடன் பழிவாங்கும் நோக்கில் வழக்கு தொடரப்பட்டது நிரூபணமாகியிருப்பதாக கூறி கலிதா ஜியா உள்ளிட்ட 6 பேரையும் விடுதலை செய்து உத்தரவிட்டது. (நி-6)

# தங்கச் சுரங்க...

# 78 ஆபிரிக்க...



(கேப்டவுன்)

தென்னாபிரிக்காவில் சட்டவிரோதச் சுரங்கம் தோண்டி அரசுடன் மோதலில் ஈடுபட்டு கடந்த இரு மாதமாக சுரங்க...
78 தொழிலாளர்கள் உ...

தென்னாபிரிக்காவி...
நகர் அருகே சட்டவி...
சுரங்கம் தோண்டும் ...
கள் ஈடுபட்டனர். அ...
வலியுறுத்தி வந்தன...
ளர்கள் சரணடைய ம...
போக்கை கடைப்பிடித்த...

இதைத் தொடர்ந்...
சுரங்கத்தில் இருந்து ...
இவ்வாறு கடந்த இ...
சுரங்கத்தில் சிக்கித் ...
களை வெளியேற்ற ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வில் போர் நிறுத்தம்!

# ...க்கும் இஸ்ரேல்!



**(காசா)**

**இஸ்ரேல்-ஹமாஸ் இடையே போரினை இடைநிறுத்த ஒப்புக்கொண்டதாக மத்தியஸ்தர்களான அமெரிக்காவும் கட்டாரும் நேற்று முன்தினம் புதன்கிழமை அறிவித்துள்ள நிலையில் குறித்த போர் நிறுத்த ஒப்பந்தம் இன்னும் முழுமையடையவில்லை என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மறுத்துள்ளார்.**

விடுவிக்கப்பட வேண்டியவர்களின் பட்டியலை உறுதி செய்வதில் அந்த விபரங்கள் மையமாக உள்ளன என இஸ்ரேலிய அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

மேலும் எந்தவொரு ஒப்பந்தமும் நெதன்யாகுவின் அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோபைடன் கூறியதாவது,

மூன்று கட்ட போர்நிறுத்த ஒப்பந்தம் காசாவில் உள்ள போராளிகள் மற்றும் இஸ்ரேலில் உள்ள நூற்றுக்கணக்கான பாலஸ்தீனிய கைதிகள் மற்றும் ஹமாஸால் சிறைபிடிக்கப்பட்ட பல இஸ்ரேலிய பணயக்கைதிகள் விடுவிப்பதை உறுதியளிக்கிறது.

மேலும் அடுத்த 6 வாரங்களில் 2 ஆம் கட்டப்போர் நிறுத்தத்திற்கு பேச்சுவார்த்தை நடக்கும். இது போர் நிறுத்தத்திற்கான இறுதி முடிவு எனத் தெரிவித்தார்.

அதேவேளை கட்டார் பிரதமர் ஷேக் மொஹமட் பின் அப்துல் ரஹ்மான் அல் தானி, போர்நிறுத்தம் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை முதல் அமுலுக்கு வரும் என்றும் இஸ்ரேலும் ஹமாஸும் "இந்த ஒப்பந்தம் சரிந்து விடாமல் இருக்க நல்ல நம்பிக்கை யுடன் செயற்படும்" என்று கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)



# ...ங்கத்தில் சிக்கி ...க்கர்கள் பலி

...ாக சுரங்கத்தில் சிக்கித் தவித்த ...ாளர்கள் உயிரிழந்தனர்.

...பிரிக்காவின் ஸ்டில்போன்டைன் ...கே சட்டவிரோதமாகத் தங்கச் ...தாண்டும் பணியில் தொழிலாளர் ...டனர். அவர்கள் பொலிஸார் ...ி வந்தனர். ஆனால் தொழிலா...ணடைய மறுத்து அரசுடன் மோதல் ...டைப்பிடித்தனர்.

... தொடர்ந்து அவர்கள் தங்கச் ... இருந்து வெளியேற மறுத்தனர். ... கடந்த இரண்டு மாதங்களாக ...் சிக்கித் தவிக்கும் தொழிலாளர் ...ளியேற்ற அரசு முடிவு செய்தது. இதற்காக தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள் நிறுத்தப்பட்டன.

அதைத் தொடர்ந்து 2 கி.மீ., ஆழ சுரங்கத்தில் உள்ள தொழிலாளர்கள் வெளியேற உதவும் கயிறு மற்றும் கம்பிகளை அகற்றியது. இதனால் உணவின்றியும் நீரின்றியும் கடந்த இரு மாதமாகத் தவித்த 78 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 160 பேர் மேலே வரமுடியாமல் தவிக்கின்றனர். இதனால் பலி எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் எனக் அஞ்சப்படுகிறது. (நி-6)

## போர்த் தாக்குதல்கள் நிறுத்தப்படும்...

# அறிவிப்பு வெளியாகிய சில மணிநேரத்தில் கோர முகத்தைக் காட்டிய இஸ்ரேல்

(காசா)

காசா நகரத்தில் இஸ்ரேல் ஹமாஸ் இடையே போர் நிறு த்த ஒப்பந்தம் அறிவிக்கப்பட்ட சில மணி நேரங்களில், இஸ்ரேல் இராணுவம் நடத்திய தாக்குதல்களில் 65 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டதை அறிந்த காசாவிலுள்ள பாலஸ்தீனர்கள் மற்றும் உலகெங்கிலுமுள்ள அவர்களது ஆதரவாளர்கள் கொண்டாட்டங்களில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு அந்தக் கொண்டாட்டங்களை முடித்துக்கொண்டு பாலஸ்தீனர்கள் அவர்களது வீடுகளுக்கும் முகாம்களுக்கும் திரும்பியபோது இஸ்ரேல் காசாவின் மீதான அதன் தாக்குதலை மீண்டும் தொடர்ந்தது.

இதன்போது வடக்கு காசா பகுதி, ஷெயிக் ரட்வான் குடியிருப்புப் பகுதி, மத்திய காசா ஆகிய இடங்களில் இஸ்ரேல் நடத்திய தரைவழி, வான்வழி மற்றும் ட்ரோன் தாக்குதல்களில் கொல்லப்பட்ட 65 பேரது உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

மேலும் இந்தத் தொடர் தாக்குதல்களில் சிக்கியவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதினால், பலியானவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கக்கூடும் எனத் தெரிவித்துள்ளனர். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓம் என்ற சிவப்பரம்பொருள் உண்மை



மருத்துவர்
சி. யமுனாநந்தா

சைவ சமயத்தவர்கள் சிவனைப் பரம்பொருளாக வழிபடுகின்றனர். சிவம் என்றால் ஒளியின் வடிவமாகும்.

பிரபஞ்சத்தின் அனைத்துப் பொருட்களும் அதாவது சடத்துவமும் உயிர்களும் ஒளியாக ஒடுங்கி மீண்டும் உற்பவிக்கின்றன. இது அவத்தைகளாக மீள மீள நடைபெறுகின்றது.

பிரபஞ்சத் தோற்றத்தினை ஓங்காரமாகவும் பிரபஞ்ச ஒடுக்கத்தினை சங்காரமாகவும் சைவ சித்தாந்தங்கள் சித்தரிக்கின்றது. வேதம் உபநிடதங்களின் சாரம் கந்த புராணத்தில் மருவிக் காணப்படுகின்றது.

உயிர்கள். சடத்துவம், காலம் என்பவற்றிற்கு விழிநிலை உண் டென்பது வேத உபநிடத உண்மை பகிர்கின்றது. உபநிடதம், இவற்றை ஆராய்ச்சியாளர்களும் அணுகுகின்றனர். இன்றைய இயற்பியல்

இவ்வாறே ஆதி பகவன் கையிலையில் வைகும் போதும் தனது இடது பாகத்தை நோக்கி அருள உமை அம்மை சிவனில் இருந்து இடப்பாகத்தில் அமைந்தார்.

**"ஏகனை யாகி வைகும் எந்தை தன்னிடம் பாலான வாகுவை நோக்கும் எல்லை மற்று அவண் உமையால் தோன்றப்**
**பாகம் அது இருத்தி அன்னாள் பரிவோடு கலன்று மேவிக்**
**கோகதனத்க் கண்ணனை குமாரரை அயனைத் தந்தான்"**

(ததீசி உத்தரப் படலம் 9180)

இவ்வாறு சிவனும் சக்தியும் ஒன்றே எனல் விளங்குகின்றது. இதன் பின்னர் திருமால் பிரமா சிவ சக்தியின் உற்பவங்கள் ஆயின. பிரமா மூலம் படைத்தல் தொழிலைச் செய்வதற்கு வேண்டிய அருளை உமையம்மையார் சிவனின் பாதியாக நின்று அருளினார்.

இவ்வாறு ஓ என்ற தனி எழுத்தில் இருந்து ஒன்று இரண்டாகி பலவாகிய தன்மையினை நோக்குவோம்.

சிவபிரான் உமையொடு சோலைக்கு சென்று அங்கு ஓவியமன்று இடை சென்றான்.

**"கா அதன் இயல்பினைக் கண்டு தன் ஒரு தேவியொடே அருள் செய்து சிற்பரன் ஆவி உள் உணர்வு என அதன் உள் வைகும் ஓர் ஓவியமன்று இடை ஒல்லை ஏகினான்"**

(கயமுகன் உற்பத்திப் படலம் 9325)

அங்கு உள்ள ஓவியங்களினை கவுரி பார்த்தருளினார். அப்பொழுது பரமன் ஆணையால் ஓங்கிய தனி எழுத்து ஒன்று அதாவது ஓ இரண்டு ஆகி இரு யானைகளாக மாறின. அவற்றினை உமையம்மையார் பார்த்து அருள அவை புணர்ச்சியின் முயற்சியினை மேற்கொண்டன. உமையம்மையார் என்கொல் என பரமனை வணங்க.

**"மூலம் ஆம் எழுத்து இவை முயங்கி மால் கரிக் கோலம் ஆய் புணர்வது எனக் கூறுக என்றலும் ஏலவார் கரும் குழவி இறைவி கேள் என ஆலம் ஆர் களத்தினன் அருள் செய்கின்றனன்"**

(கயமுக உற்பத்திப் படலம் 9329)

ஓரெழுத்து ஈரெழுத்தாகி களிறு பிடியாகி படைத்தல் தொழில் செய்யக் காரணம் என்ன என உமையம்மையார் வினவுதலும் சிவன் உமையம்மையாரிடம் நீவீர் அவ் ஓவியங்களினை பார்த்து அருளியதாலேயே இங்ஙனம் உற்றன என உமையம்மையாரின் அருளல் தொழிலினை எடுத்து விளக்குகின்றார்.

**"முன்பு நீ காண்டலின் மூலமாயுடையதோர்**
**மன் பெரும் தொல் பொறி மருவி யீரு ருவுறீஇ**
**ஆன்பினாலானை போற்புணரும் ஆல் ஆகையால்**
**நின் பெரும் தகவினை நினைகிலாய் நீயுமே"**

(கயமுக உற்பத்திப் படலம் 9330)

இக்காட்சியில் உணரப்பட்ட அம்மையின் மாட்சி சிவனன்றி வேறோர் அறியார்.

இதுவே ஓம் எனும் குடிலையின் மெய்ப் பொருள் சிவபெருமான் உமையம்மையாருக்கு விளக்கும் போது பிடி களிறு மறைந்து குடிலை ஆகின.

**"அக்கணத்து ஆயிடை ஐங்கரத்தவன் அருள் முக்கண் நால் வாயிகக் மும் மதத்து ஆறு பாய மைக் கரும் களிறு எனும் மாமுகத்தவன் மதிச் செக்கர் வார் சடை நன் ஓர் சிறுவன் வந்து அருளினான்."**

(கயமுகன் உற்பத்திப் படலம் 9333)

அப்பொழுது ஓங்காரம் எனும் ஓ எழுத்தில் உருவான யானை முகத்துடன் ஐங்கரன் ஆயிடை இவண் சிறுவன் செக்கர் வாய் சடையுடன் வந்து அருளினான். இதுவே சிவம் சக்தியின் ஓம் என்ற பிரணவப் பொருள் உணர்த்தும் சிவ அம்சமாக எல்லா வினைகளுக்கும் முதலான விநாயகப் பெருமான் உற்பவமாகும்.

**"ஒருமையாலுணருவோருணர் வினுக்கு உணர்வதாப் பெருமையான் எங்கணும் பிரிவு அரும் பெற்றியான் அருமையான் ஏவரும் அடிதொழும் தன்மையான் இருமை ஆம் ஈசனே என்னை நின்று அருளுவான்"**

(கயமுகன் உற்பத்திப் படலம் 9334)

யானைகளின் செவிகளும் எமது செவிகளும் ஓங்கார எழுத்தினை குறிக்கும் ஓ என்ற எழுத்தின் வடிவினை உடையன.

ஒருமையாய் இருமையாய் சிவனின் ஓர் செவி உமை தோன்ற இரு செவிகள் ஆகி பிரபஞ்ச இயக்கத்தை படைத்தல் முதல் நடத்தலே ஓம் என்ற பிரணவப் பொருள் எக்காரியத்தினையும் செய்யும் போது விநாயகப் பெருமானை எமது கைகளால் நெற்றியில் குட்டி மாறி மாறி இரு செவிகளைப் பற்றி மும்முறை முட்டிகளில் தாழ்ந்து வணங்குதல் ஓம் என்ற பிரணவ உட்பொருள் நாயகனை துதி செய்து கருமம் ஆற்றவே. இவ்வாறு நெற்றியில் மும்முறை குட்டும் போது எழும் ஒலி ஓம் என்பதாகும்.

மும்முறை முட்டியில் இருந்து எழும்போது ஆத்மா குண்டலினி சக்தியாக மூலக்கனலில் இருந்து பரிபோல் நெற்றிக்கு வந்து பரமனின் துரியம் பெறும். படைத்தல் தொழிலைச் செய்யும் பிரமா பிரணவப் பொருளை முற்றாக உணராத தன்மையில் பால குமாரனிடம் தண்டனை பெற்றார்.

சிவபெருமான் பாலன் குமாரனிடம் பிரணவப் பொருளைக் கேட்ட போது தந்தைக்கு அவன்றன் செவிகளில் அருளி சுவாமிநாதன் என்ற அருள் தன்மையைப் பெற்றார்.

# மாணிக்கவாசகர் மடாலயம் அன்னதானம், திண்ணபுரம் சிவன் வழிபாடும் நிறைவாகவும் எம்பெருமானுக்கு நன்றியும் இன்று 17.01.2025 மாணிக்கவாசகர் மடாலயத்தில் திருவாசகமுற்றோதல்

திருமுறைகள், திருவாசகம், திருப்புகழ் ஓதி இரு ஆதின கர்த்தாக்களையும் அன்பு நெறியில் ஆலய கும்பாபிசேகம் நடாத்தி மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வோமாக.

பூரணபுட்கலைக் ஐயனாரையும், திண்ணபுரம் சிவன், தில்லைக்கூத்தனையும் வணங்குவோம். ஈழத்துச் சிதம்பரம் கும்பாபிஷேகம் காண்போம்.

திருமூலர் திருவாக்கு-பாடிப்பரவுவோம்- 32

**தேவர் பிரான், நம்பிரான் திசை பத்தையும்**
**மேவு பிரான் விரி நீர் உலகு ஏழையும்**
**தாவு பிரான் தன்மை தான் அறிவார் இல்லை**
**பரவு-பிரான் அருள் பாடலும் ஆமே**

எம்பெருமான் எளியவராகிய நமக்குத் தலைவன். அப்பெருமான் சீவகோடிகளிடம் பத்துப் பக்கங்களிலும் நிறைந்திருப்பவன். நீரால் சூழப்பட்ட ஏழு உலகங்களையும் கடந்து விளங்குபவன். அவனது தன்மையை அறிபவர் எவரும் இல்லை.

**இத்தகைய இறைவனைப் பாடிப் பணிந்து வணங்குவோம்.**

அடியேன் இருவருடங்களுக்கு முன் தேர் வீதி வரும் போது பூட்டிக்கிடந்த மாணிக்கவாசகர் மடாலயம் முன்பாக தரையில் ஓர் சுட்டியில் விளக்கு ஏற்றி திருவாசகம் ஓதும் போது ஒருவர் வந்து என்னை இந்த இடத்தில் பாடுவதை நிறுத்து என நிந்தித்தார்.

வேறு ஒருவர் வந்து அடிக்குமாப்போல நெருங்கினார். நான் அடியேன் ஆண்டிருகேணி ஐயனிடம் முறையிட்டேன். இது விடயம் அம்பலவி முருகரிடம் சொன்ன போது. இன்னமும் ஒருவர் வந்து எம்மை நிந்தித்தார்.எல்லாவற்றையும் மறந்தேன் இப்போது. எம்மை நிந்தித்தவர்களைக் காணவில்லை.

இம்முறை திருவெம்பாக்காலத்தில் மடாலயம் போகும் பாதையில் கற்களாலும் மணலாலும் ஓட்டாலும் குறுக்கே இருந்ததால் அடியேன் கற்குவியல் மேலே ஏறிப் போய் மடாலயத்தில் திருவாதவூரடிகள் புராணமும் நிறைவாகிப் பின் மாணிக்கவாசகர் சுவாமிகளுக்கு சிவத்திரு முகுந்தன் ஐயா அபிஷேக ஆராதனையும் நிறைவாக்கி வரும் போது ஓர் நபர் தாடியுடன் நின்று எம்மை தன் ஒருகரம் ஆள்காட்டி விரல் காட்டி கற்குவியல்மேல் ஏறினால் உமக்கு நகர பாதுகாவலர் (Police) மூலம் நடவடிக்கை எடுப்பேன் என அச்சுறுத்தினார். இவர் மாதா மாதம் திருவாசகம் மடாலயத்தில் ஓதும் போது வருவார். போவார் ஒருமுறை அடியேன் திருவாசகம் ஓதும் போது மடாலயத்தில் குறுக்கிடாதே எனவும் சொல்ல. அவர் அந்த இடத்தில் நிந்தித்தார். பலவாறு அவமதித்தார் "எல்லாம் சிவன் செயல் என நான் என் செயல் இழந்தேன்.

அன்பே சிவம் "வாலறிவுடைய மகான்களுக்கு வணக்கம

**"மகாகவி பாரதியார் கவி"**

**வீழ்வேன் என்று நினைத்தாயோ?**
**தேடிச் சோறுநிதந் தின்று - பல**
**சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்**
**வாடித் துன்பமிக உழன்று - பிறர்**
**வாடப் பலசெயல்கள் செய்து - நரை**
**கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்**
**கூற்றுக் இரையெனப்பின் மாயும் - பல**
**வேடிக்கை மனிதரைப் போலே - நான்**
**வீழ்வே னென்றுநினைத் தாயோ?**

*- மகாகவி பாரதியார்*

உயர்வு தாழ்வு பக்தியுடையோர். உயர்ந்தோர் அஃதிலாதோர். தாழ்ந்தோர் என்பது பக்தர்களின் அளவு கோல் ஆகும்.

உயர் குலத்தில் பிறந்து வேதங்கள் ஓதுவித்தும் வேள்விகள் செய்தாலும் தொண்டர்களோடு கூடி இறைவனைத் தொழும் நலம் வாய்க்கப் பெறாதவர்கள் பிற உயிர்களை வேட்டையாடித் திரியும் தாழ்வுடையோராகவே கருதப்படுவார்.

**உமையோர் பங்கர் கச்சியுள்**
**ஏகம்பக் கூடித் தொழும்**
**நலத்தமை யாதவர் வேட்டுவர் தம்மின்**
**நடுப்படையே என்றும்**
**கடையாய்ப் பிறக்கினு கச்சியுள் ஏகம்பத்து**
**எங்களையாள்**
**உடையான் கழற்கு அன்பரேல் அவர்**
**யாவருக்கும் உத்தமரே**

*பட்டினத்தார் பாடல்.*

மனம் ஒரு குரங்கு. மனத்தை ஒரு நிலைப்படுத்தி உறுதிப்பட நிறுத்து என பட்டினத்தார் மனத்திற்கு நல்ல அறிவுரை செய்கிறார்.

"ஏ மனமே! எம்முடைய ஒப்பற்ற அறிவுரைகளை ஏற்றுக்கொண்டு உறுதியாக நில்! இறைவன் ஒருவன் உண்டென்று நம்பு! உயர்ந்தவையெனக் கருதப் படும் செல்வங்கள் எல்லாம் அவ்வாறு இல்லை எனத் தெளிவு கொள்! பசியால் வாடி வருவோரின் முகம் பார்த்து அற நெறியில் மடாலயங்களில் உணவிடு!

நல்லறங்களும் நட்பும் நன்னெறி எனக் கைப்பற்று! தனிப்பட்ட இன்ப துன்பங் கட்காக ஒருபுறம் சாராமல் நடுநிலையில் நில்! இந்த அறிவுரைகளைக்கேட்டு ஏற்றுச் செயற்பட்டால் உனக்கு அமைதியும் மகிழ்ச்சியும் கிட்டும் என்பது உறுதி என்பதை மனத்திற்கு உணர்த்துகிறார் பட்டினத்தார்.

**இறை நெறிகளுடன் வாழ்ந்து வந்து மனப்பக்குவத்தில் திளைத்து இறைவனை அடைதல் ஒரு நெறி ஆகும்.**

முன்னர் ஆலய தர்மகர்த்தாக்கள் காட்டிய வழியில் அவர்களையும் வணங்கி ஆலயத்தையும் வணங்கி. ஆண்டி முனிவர் சமாதியாகிய பின்னர். அருந்தொண்டு புரிந்த அம்பலவி முருகர் வழியில் சண்முகத்தார், வேலாயுதன், மாசில்லாமணி, கோவிந்தன் இராமநாதர், கோவிந்தன், சின்னத்தம்பி. துரையப்பா, முருகேசு, அப்பாக்குட்டி ஆண்டி ஐயா, மு.சுந்தரலிங்கம், அம்பலவி முருகர் எல்லோரும் நினைவுடன் வாழ்த்தி வணங்குவோம்.

திருவாசகம் முற்றோதல் ஓதி ஆலய கும்பாபிஷேகம் தரிசிப்போம்.

சிறு சிறு திருத்தங்களை என்றும் முன்னர் இரு வருகச் செய்த தொண்டினைச் செய்ய தற்போது மு.சு.குகநேசன் அவர்களையும் அம்பலவி முருகரையும் நெறிப்படுத்தி. அன்புடன் இறைவன் திருவடிகளை வழிபடுதற்குரிய நல்வினை யுடையவர்கள் தமது வழிபாட்டினால் விண்ணுலகத்தையே பெற நினைத்தாலும் நினைத்தவாறே பெறுவர்.



க.கு.க.சிவபாலன்
போசகர் ஈழத்துச் சிதம்பரம், மாணிக்கவாசகர் மடாலயம்.

(2051)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு நீர்த்தேக்கத்தின் 105 ஆண்டு நிறைவை முன்னிட்டு பானைகளில் பொங்கல்

(தருமபுரம்)

இரணைமடு நீர்த் தேக்கம் நீர்ப்பாசனத்துக்காக திறந்து விடப்பட்டு 105 ஆண்டு நிறைவையொட்டி நன்றி செலுத்தும் பொங்கல் விழா நேற்றைய தினம் இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு நேற்றுக் காலை 9 மணியளவில் இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளர் முத்து சிவமோகன் தலைமையில் கனகாம்பிகை அம்மன் ஆலய முன்றலில் இடம்பெற்றது.



சமய நிகழ்வுகளைத் தொடர்ந்து பிரதான பொங்கல் 105 பானைகளில் பொங்கல் நிகழ்வு இடம் பெற்றது.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரன், நீர்பாசன பொறியியலாளர்கள், விவசாய திணைக்களம்சார் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், விவசாய பீட மாணவர்கள், விவசாயிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (8-100-316)



# நெல் அறுவடை விழா



(வவுனியா)

வவுனியாவில் பாரம்பரிய முறைப்படி நெல் அறுவடை நிகழ்வு நேற்று முன் தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத் சந்திரவினால் பாரம்பரிய முறைப்படி நெல் அறுவடை செய்யப்பட்டு வவுனியா கந்தசுவாமி ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இந்நிகழ்வில் மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மற்றும் மாவட்ட செயலக உயர் அதிகாரிகள், உத்தியோகத்தர்கள், கோவில்குளம் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் விவசாயிகள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (8-250)

# 50 வருடங்களுக்கு மேலாக குன்றும் குழியுமாக காணப்படும் வீதி

## உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுப்பார்களா?

(வவுனியா)

முள்ளியவளை மேற்கு நாவலர் வீதி புனரமைக்கப்படாமையால் அப்பகுதி கிராம மக்கள் போராட்டம் ஒன்றினை நேற்று முன்தினம் மாலை முன்னெடுத்திருந்தனர்.

முல்லைத்தீவு முள்ளியவளை மேற்கு நாவலர் வீதி 1,2,3 குறுக்கு வீதிகள் 50 வருடங்களுக்கு மேலாக புனரமைக்கப்படாததனால் அண்மைய மழைக் காலங்களில் மழைநீர் தேங்கி நிற்கின்ற தோடு குறித்த பகுதியில் அமைக்கப்பட்ட பாலமும் சீராக அமைக்கப்படவில்லை.

இதனால் மழைக்காலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்பதோடு, நீர் அதிகரிக்கும் சந்தர்ப்பங்களில் வீட்டுக்குள் வெள்ளநீர் புகுந்துள்ளது. இதனால் குறித்த பகுதியில் வாழுகின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.



குறித்த வீதி குன்றும் குழியுமாகவே காணப்படுவதுடன் வீதியில் பயணம் செய்யும் அரச ஊழியர்கள், பாடசாலை மாணவர்கள், மாற்றுத்திறனாளிகள், மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

எனவே உரிய அதிகாரிகள் குறித்த வீதியினைப் புனரமைத்துத் தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (8-299)

# மின்தடையால் தடுப்பூசிகளுக்கு பாதிப்பில்லை

(வவுனியா)

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நேற்று முன்தினம் மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது.

நிலுவை செலுத்தப்படாமையினால் மின் துண்டிக்கப்பட்டதாகவும் நீண்ட நேரமாக மின்சாரம் இணைக்கப்படாது விடின் அங்கு குளிரூட்டியில் வைக்கப்பட வேண்டிய தடுப்பூசிகளுக்கு பாதிப்பு ஏற்படுமா என்கின்ற சந்தேகம் பொதுமக்களிடையே நிலவியது.

இந் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவிக்கையில், சுமார் இரண்டு மணி நேரம் மாத்திரமே மின்சாரம் துண்டிக்கப்பட்டிருந்தது. எம்மிடம் உள்ள குளிரூட்டிகள் 24 மணித்தியாலம் மின்சாரம் தடைபட்டாலும் கூட பாதுகாக்க கூடிய வசதி கொண்டவையாக காணப்படுகின்றது. எனவே இங்குள்ள தடுப்பூசிகள் எந்த விதத்திலும் பழுதடைவதற்கு சந்தர்ப்பமில்லை என அவர் தெரிவித்திருந்ததுடன் பொது மக்கள் எவ்வித ஐயமும் இன்றி குறித்த தடுப்பூசிகளைப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்திருந்தார். (8-250)

# சீரற்ற காலநிலையால் 245 குடும்பங்கள் பாதிப்பு

(தருமபுரம்)

தற்பொழுது நிலவுகின்ற சீரற்ற காலநிலை காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் இரணைமடுக்குளத்தின் மேலதிக நீரை வெளியேற்றி வருவதன் காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தின் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கண்டாவளை ஐயன் கோயிடி, பெரியகுளம், ஊரியான் ஆகிய பகுதிகளில் வசிக்கும் மக்கள் வெள்ள அனர்த்தம் காரணமாக இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில் கண்டாவளை மகா வித்தியாலயத்தில் 147 குடும்பங்களைச் சேர்ந்த 371 பேரும் ஐயன்கோயிலடி பாடசாலையில் 26 குடும்பங்களைச் சேர்ந்த 68 பேரும் ஊரியான் பகுதியில் 62 குடும்பங்களைச் சேர்ந்த 190பேரும் பெரியகுளம் பகுதியில் 10 குடும்பங்களைச் சேர்ந்த 31 பேரும்இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மொத்தமாக 245 குடும்பங்களைச் சேர்ந்த 660 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான சமைத்த உணவு பிரதேச செயலகம்ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்டு வழங்கப்பட்டு வருவதுடன் அவர்களுக்கான சுகாதார வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. (8-316)

# பாலஸ்தாபன கும்பாபிஷேகம்

(வவுனியா)

தச்சநாதன்குளம், பண்டாரிக்குளம் அருள்மிகு ஸ்ரீ வலம்புரி விநாயகர் தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக விஞ்ஞாபனம் எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பமாக வுள்ளது.

அடியார்களைக் கலந்து கொள்ளுமாறு ஆலய பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (8)

# மோட்டார் சைக்கிளுக்கு தீ வைப்பு



(மல்லாவி)

மல்லாவி கல்விளானில் வயல் வெளியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன் தினம் இனந்தெரியாத நபர்களினால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளது.

கல்விளான் வயற் காவல் நடவடிக்கையில் ஈடுபட்டு கொண்டிருந்த விவசாயி ஒருவரின் மோட்டார் சைக்கிளே இவ்வாறு தீயூட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (8)



வவுனியாவில் கருமாரி அம்மன் ஆலயம் மற்றும் கந்தசுவாமி ஆலயங்களில் நேற்று முன்தினம் மாலை பட்டிப் பொங்கல் நிகழ்வு சிறப்பாக இடம்பெற்றது. (படம்:வசந்தரூபன்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 683



"ஐயோ! பாவம்! குதிரை அவரை எங்கே தள்ளிற்றோ, என்னவோ? அவருடைய உயிருக்கே ஆபத்து நேர்ந்தாலும் நேர்ந்திருக்கலாம். அதனால்தான் அவர் உங்கள் மகாசங்கத்துக்கு வரவில்லை. நாம் மறுபடியும் போய் அவரைத் தேடிப் பார்க்கலாமா?" என்று கேட்டான்.

"அழகுதான்! அதைப்பற்றி நமக்கு என்ன? நம்முடைய வேலையை நாம் பார்க்கலாம் வா! புறப்படு உடனே! பொழுது விடிவதற்குள் நாம் கொள்ளிட நதியின் தோணித் துறையில் இருக்க வேண்டும்" என்றான் ஆழ்வார்க்கடியான். "மதுராந்தகர் வாய்க்காலிலோ, வயல் வரப்பிலோ விழுந்து செத்துக் கிடந்தாரானால்?.. அப்போது கூட நமக்கு என்ன கவலை என்று சொல்வீரா?"

"அப்படியெல்லாம் நேர்ந்திராது. அநிருத்தர் அதற்கு முன் ஜாக்கிரதை ஏற்பாடு செய்திருப்பார்." "முதன் மந்திரி அநிருத்தரா? அவருக்கு என்ன இதைப் பற்றித் தெரியும்?"

"ஆகா! அது என்ன அப்படிக் கேட்கிறாய்? அன்பில் அநிருத்தருக்குத் தெரியாமல் இந்த இராஜ்யத்தில் எந்த இடத்திலும் எதுவுமே நடக்க முடியாது."

"ஓகோ! கடம்பூர் மாளிகையில் நடந்த சதிக்கூட்டத்தைப் பற்றிய விடயமும் அவருக்குத் தெரியுமா?"

"ஒரு விடயத்தை ஞாபகப் படுத்திக் கொள். வீர நாராயணபுரத்துத் திருவிழாவின் போது பழுவூர் ராணியின் பல்லக்குப் போனதை நாம் இருவர் ஒரு மரத்தடியில் நின்று பார்த்தோம் அல்லவா!"

"ஆம் பல்லக்கின் திரை விலகியதும் நீர் அடைந்த பரபரப்பு இன்னும் என் ஞாபகத்தில் இருக்கிறது. 'பழுவூர் ராணியிடம் ஒரு ஓலை கொடுக்க முடியுமா' என்று நீர் என்னைக் கேட்டீர்?"

"நீ அதற்குச் 'சீச்சீ! அது என்ன வேலை' என்றாய். நான் ஏதோ? காதல் ஓலை கொடுக்க விரும்பியதாகவே எண்ணினாய். 'சதிகாரர்களின் பேச்சை நம்பி மோசம் போகவேண்டாம்' என்று மதுராந்தகருக்கு எச்சரிக்கை செய்யவே நான் விரும்பினேன், முதன் மந்திரியின் கட்டளைப்படி!" "பல்லக்கில் இருந்தது மதுராந்தகர் என்று உமக்குத் தெரியுமா?"

"முதலில் சந்தேகித்தேன் திரைவிலகியதும் அந்த இரகசியம் தெரிந்தது. நீ நல்ல அழுத்தக்காரன். நான் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் நீ பல்லக்கில் இருந்தது பழுவூர் ராணி அல்ல மதுராந்தகர் என்று சொல்ல மறுத்து விட்டாய் அல்லவா?"

"நீர் மாத்திரம் அழுத்தக்காரர் இல்லையா? இன்று சாயங்காலம் நீர் எங்கே போகப் போகிறீர் என்று கூடச்சொல்ல மறுத்து விட்டீரே."

"சொன்னால் நீ அதிலும் தலையிட வேண்டும் என்று பிடிவாதம் பிடித்திருப்பாய். இப்போதே எவ்வளவு சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டாய், பார்! இனிமேலாவது." "காலாமுகர் கூட்டத்தைப் பற்றியும் மதுராந்தகர் அங்கே போக உத்தேசித்திருப்பது பற்றியும், முதன் மந்திரிக்குத் தெரியுமா?"


"தெரியாமலா என்னை அனுப்பினார்? அதே சமயத்தில் மதுராந்தகர் அங்கே போய்ச் சேராதிருப்பதற்கும் ஏற்பாடு செய்திருக்கிறார். யாரோ தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தான் என்று சொன்னாயே, அவனும் அநிருத்தரின் ஆளாகத்தான் இருந்திருப்பான். வேண்டுமென்றே குதிரையை மிரட்டித் தறிகெட்டு ஓடும்படி செய்திருப்பான். தரையில் விழுந்த இளவரசரை யாராவது எடுத்துக் காப்பாற்றியிருப்பார்கள்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## அடியும் ஆதரவும்



பக்கத்து வீட்டிலே ஒரே கூச்சலும் கூப்பாடுமாயிருந்தது. தங்கம்மாள் ஓடிப் போய்ப் பார்த்து விட்டு வந்தாள். "என்ன நடந்தது?" என்று விசாரித்தார் பொன்னப்பர்.

"ஆசிரியர் நமசிவாயம் கடன் வாங்கியிருந்தாராம். கடனைத் திருப்பிக் கொடுக்க முடிய வில்லை. கடன் கொடுத்த முரடன் கடனைத் திருப்பிக் கொடுக்கிறாயா இல்லையா என்று கேட்டு அடித்துக் கொண்டிருக்கிறான்" என்று சொன்னாள் தங்கம்மாள்.

"ஆசிரியர் நமசிவாயத்தை அடிக்கிறானா? அப்பாவியாயிற்றே அவர். இரு, இதோ வருகிறேன்!" என்று சொல்லிப் பொன்னப்பர் எழுந்தார். பக்கத்து வீட்டுக்கு ஓடினார்.

ஆசிரியர் நமசிவாயத்தை அந்த முரடன் அப்போதும் அடித்துக் கொண்டுதான் இருந்தான். பொன்னப்பர் அவன் மேல் பாய்ந்தார். அவன் கையில் இருந்த தடியைப் பறித்தார். அவனைத் தூணோடு தூணாகச் சேர்த்து வைத்துக் ஓடினார். [illegible] நமசிவாயத்தை நோக்கி, "என்ன நடந்தது? இவனிடம் எவ்வளவு கடன் வாங்கினீர்கள் ?" என்று விசாரித்தார்.

"நான் கடனே வாங்கவில்லை. என்னை உங்களுக்குத் தெரியாதா? எனக்குக் கடன் வாங்க என்ன தேவையிருக்கிறது!" என்று அடிபட்ட வலி வேதனையோடு பேசினார் ஆசிரியர் நமசிவாயம். அவர் பொய் பேசாதவர் என்பது பொன்னப்பர் அறிந்ததே.

கொல்லும் பார்வையோடு அவர் முரடனை நோக்கினார். "சந்தையில் ஐந்து ரூபாய் கொடுத்தேன். இப்போது இல்லை என்கிறாரே" என்றான் முரடன்.

நமசிவாயம் அப்பக்காரக் கிழவி வீட்டில் சாப்பிடுகிறார் என்பது யாவரும் அறிந்த செய்தி.

அவர் சந்தைக்குப் போக வேண்டிய வேலையே இல்லை. முரடன் பொய் அம்பலமாகி விட்டது. பொன்னப்பர் அவனைக் காவல் நிலையத்துக்கு அனுப்பி வைத்தார்.

"பொன்னப்பரே, சமயத்தில் நீங்கள் வந்து காப்பாற்றாவிட்டால், அந்த முரடன் என்னைச் சாகடித்திருப்பான்.

பிறர் துயரம் தீர்க்க முன் வரும் உங்களைப் போன்ற வீரர்களால் தான் என்னைப் போன்ற அப்பாவிகள் பிழைத்திருக்கிறார்கள்" என்று நன்றி நிறைந்த சொற்களைக் கூறினார் ஆசிரியர் நமசிவாயம்.

கருத்துரை :- பெரியவர்கள், பிறர் துன்பத்தைத் தமக்கு வந்ததாகக் கருதி விரைந்து சென்று நீக்குவார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமக்கு இன்னலும் இடையூறும் இருக்கத்தான் செய்யும் ஆனால் நமது உழைப்பு ஒரு நாளும் வீண் போகாது. – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நெல் அழிவில் இருந்து விவசாயிகளைக் காப்பாற்றுங்கள்

மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்ற மகாகவி உருத்திரமூர்த்தியின் அர்ப்பணத்தைப் பார்க்காதவர்கள் இருக்க முடியாது.

மழை இல்லாத பூமியை உழுது பண்படுத்தி ஆழக்கிணற்றில் இருந்து தண்ணீர் இறைத்துப் பயிர் செய்து அறுவடைக்குத் தயாராக இருந்தபோது, ஓர் இரவுப் பொழுதில் கொட்டித் தள்ளிய கனமழையால், அத்தனை பயிர்களும் அழிந்துபோக, அந்த இழப்புகளைத் தாங்கியவாறு அதே விவசாயி மண்வெட்டியைத் தோளில் சுமந்து மீண்டும் நிலத்தைக் கொத்தத் தயாராகிறான்.

இயற்கை தந்த அனுபவத்தை மீண்டும் தொடங்கும் மிடுக்கு என்பதாகக் கவி படைத்த மகாகவியின் பாடல் வரிகளை அண்மையில் பெய்த கடும் மழை நிதர்சனமாக்கியுள்ளது.

ஆம், அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கிக் கிடக்கின்றன.

அந்தோ! பார்த்தால் வயிறு பற்றி எரியும் என்று சொல்வார்களல்லவா அதற்கு ஏதேனும் உதாரணம் உண்டா என்றால், அரையும் குறையுமாக விளைந்திருந்த நெற்பயிர்கள் வெள்ளத்தில் மூழ்கிக் கிடப்பதைப் பார்ப்பதுதான் எனலாம்.

ஆம், அந்தளவுக்கு கடந்த சில நாட்களாக, பெய்த மழை வேளாண் விவசாயிகளை மிக மோசமாகப் பாதிக்கச் செய்துள்ளது.

உண்மை. அதிகூடிய விலைக்கு வாங்கப்படும் விதை நெல். ஆயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு வாங்கிய 50 கிலோ யூரியாவை எண்ணாயிரத்து ஐந்நூறு ரூபாவுக்கு வாங்குகின்ற பரிதாபம்.

இதையும் கடந்து புதுப்புது நோய்கள், புதுப்புது நோய்களுக்குத் தயாராக இருக்கின்ற கிருமிநாசினிகள் அவற்றின் அறா விலைகள்.

என்ன செய்வது விதைத்த நெல்லை அறுவடை செய்தாக வேண்டும் என்ற ஒரே நோக்கில் எல்லாச் செலவுகளையும் தாங்கி நின்ற விவசாயியை மழை வஞ்சித்துவிட்டது.

யாரிடம் நோவது யார்க்கெடுத்து உரைப்பது. வயலில் நிறைந்த வெள்ளத்தை வெட்டிவிடுவதற்கே முடியாத கமக்காரர் அமைப்புகள். வெள்ளத்தில் விழுந்து கிடக்கின்ற நெல்லை வந்து பார்க்காத கமத்தொழில் திணைக்களங்கள்.

இந்த நிலையில் அண்மையில் பெய்த மழையால் பாதிக்கப்பட்ட – பெரு நட்டமடைந்த, விவசாயிகளுக்கு கணிசமான நிவாரணத்தை வழங்கி அவர்களைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு அரச நிர்வாகத்துக்கு உண்டு.

ஆகவே இதுபற்றி மக்கள் பிரதிநிதிகளும் அரச நிர்வாகமும் கவனத்தில் எடுத்து பாதிக்கப்பட்ட விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டும்.

இல்லையேல் நெற்செய்கை எங்களை விட்டு விலகிப்போவது தவிர்க்க முடியாததாகி விடும்.

# இலங்கையின் இறைமைக்கு சீனா ஒருபோதும் குந்தகம் விளைவிக்காது

## ஜனாதிபதி அநுரவிடம் எடுத்தியம்பினார் சீன தேசிய காங்கிரஸின் தலைவர் ஜாவோ லெஜி

(பீஜிங்)

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சீனா சென்றுள்ளதுடன் சீன ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய தரப்பினரைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளதுடன் பல முக்கிய ஒப்பந்தங்களும் கைச்சாத்தாகியுள்ளன.

இவை இலங்கையின் இறைமையினைப் பாதிக்கும் சீனாவின் பிடிக்குள் இலங்கை சிக்கும் உள்ளிட்ட பல விமர்சனங்கள் முன்வைக்கப்பட்ட நிலையில்,

இலங்கையின் சுயாதீனத் தன்மைக்கோ ஆட்புல ஒருமைப்பாட்டிற்கோ இறையாண்மைக்கோ எதுவித பாதிப்பும் சீனாவினால் ஏற்படாது என சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி ஜனாதிபதி அநுரவிடம் உறுதியளித்துள்ளார்.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மற்றும் சீன தேசிய காங்கிரஸ் நிலைக்குழுவின் தலைவர் ஜாவோ லெஜி ஆகியோருக்கிடையில் நேற்றுக்காலை இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கருத்துத் தெரிவித்த ஜாவோ லெஜி, இலங்கையுடன் தொடர்ந்து ஒத்துழைத்துச் செயற்பட வேண்டும் என்பதே சீன தேசிய காங்கிரஸின் எதிர்பார்ப்பாகும் எனவும் கூறினார்.

வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சர் விஜித ஹேரத், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க, இலங்கைக்கான சீனத் தூதுவர் சீ ஜென்ஹோங், சீனாவிற்கான இலங்கைத் தூதுவர் மஜிந்த ஜயசிங்க ஆகியோரும் இதன்போது கலந்து கொண்டனர். (ம-7)

# சீனாவுக்கு அநுர அளித்த வாக்குறுதிகள் எவை?

## மௌனம் சாதிக்காது உடன் பகிரங்கப்படுத்துமாறு ஆளும் தரப்புக்கு ஐ.தே.க அழுத்தம்

(கொழும்பு)

சீனாவுக்கு விஜயம்மேற்கொண்டுள்ள ஜனாதிபதி அந்த நாட்டுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் தொடர்பில் இன்னும் நாட்டுக்கு தெரிவிக்கப்படவில்லை.

அதனால் சீனாவுக்கு வழங்கிய வாக்குறுதிகளை அரசாங்கம் உடனடியாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்தார்.

கடந்த அரசாங்க காலங்களில் வெளிநாடுகளுடன் ஒப்பந்தங்கள் கைச்சாத்திட்டதுடன் அந்த ஒப்பந்தங்களின் நன்மைகள் தொடர்பில் அரசாங்க ஊடகங்கள் நாட்டு மக்களுக்கு அறிவுறுத்துவது வழமை.

ஆனால் அவ்வாறான எந்த அறிவிப்பும் இதுவரை வெளிவரவில்லை.

ஆகவே அரசாங்கம் சீனாவுடன் 15 ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளதாகவே தெரிவிக்கப்படுகிறது. அதனால் அரசாங்கம் சீனாவுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தங்கள் குறித்து நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும் என்றார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தியோகபூர்வ அலுவலகத்தில் ஐக்கிய தேசியக் கட்சி ஏற்பாடு செய்திருந்த ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

### மன்னாரில் துப்பாக்கிச் சூட்டையடுத்து

## சந்தேக நபர்களை கைது செய்ய விஷேட பாதுகாப்பு நடவடிக்கை

(மன்னார்)

மன்னார் நகரம் உள்ளிட்ட பகுதிகள் உச்சக்கட்டப் பாதுகாப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றத்துக்கு முன் நேற்றுத் துப்பாக்கிச் சூடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதில் இருவர் உயிரிழந்திருந்தனர்.

எனவே குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நபர்கள் மன்னாரில் இருந்து வெளியேறுவதனைத் தடுக்கும் முகமாகவே பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸார், இராணுவத்தினருடன் இணைந்து விஷேட தேடுதல் வேட்டைகளிலும் ஈடுபட்டுள்ளனர். (ம-7)

## மின்கட்டணத்திருத்தம் இறுதித் தீர்மானம் இன்று

2025ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களுக்கான மின்கட்டணத் திருத்தம் தொடர்பான இறுதித் தீர்மானம் இன்று அறிவிக்கப்படவுள்ளதாகப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த முறை திருத்தமின்றி தற்போதைய அளவிலேயே மின்கட்டணத்தைப் பேணுவதற்கு இலங்கை மின்சார சபை பரிந்துரைத்துள்ளது.

எனினும் இந்த விடயம் தொடர்பில் பொது மக்களின் கருத்துக்களையும் யோசனைகளையும் கோரியுள்ள பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு இறுதித் தீர்மானத்தை இன்று அறிவிக்கவுள்ளது. (ம-7)

### ஜனாதிபதித் தேர்தல் தொடர்பிலான

## கண்காணிப்பு அறிக்கை பிரதமரிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு தொடர்பான ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல்கள் கண்காணிப்பாளர்களின் இறுதி அறிக்கையை நேற்றையதினம் ஐரோப்பிய ஒன்றியத் தேர்தல் கண்காணிப்பாளர்கள் குழுவின் தலைமை கண்காணிப்பாளர் நாச்சோ சான்செஸ் அமோரினா பிரதமர் ஹரிணி அமரசூரியவிடம் கையளித்துள்ளார்.

இதன்போது எதிர்காலத் தேர்தல் செயல்முறைகளை மேம்படுத்துவதற்கான முக்கிய பரிந்துரைகள் மற்றும் அவற்றை செயற்படுத்துவதற்கான எதிர்கால நடவடிக்கைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

### விளையாடிக் கொண்டிருந்தவேளை

## திடீரென மயங்கிய மாணவன் உயிரிழப்பு

பென்தோட்ட பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் உணவு இடைவேளையின் போது விளையாடிக் கொண்டிருந்த மாணவன் ஒருவர் திடீரென மயக்கமுற்றுச் சரிந்துள்ளார்.

இதனையடுத்து குறித்த மாணவன் உடனடியாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதிலும் மாணவன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் குறித்த பாடசாலையில் ஆரம்ப தரத்தில் கல்வி பயிலும் பென்தோட்ட தவுலபிட்டியப் பகுதியைச் சேர்ந்த இனூரா எவ்மித் என்ற ஏழு வயது மாணவனாவார்.

சிறுவனின் மரணம் தொடர்பிலான விசாரணைகளை பென்தோட்டப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடக்கவிருக்கும் உள்ளூராட்சி சபைத்தேர்தல்கள் போட்டியிட இருக்கும் இளம் சமூகத்தினருக்கான ஒரு தெளிவூட்டல் பகுதி – I



14

கலாநிதி க. தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர் - எல்லை நிர்ணய ஆணைக்குழு.

**அட்டவணை-9 உள்ளூராட்சி அதிகார சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை**

| கட்சியின் பெயர் | A | B | C |
|---|---|---|---|
| X | 13 | 13 | 13 |
| Y | 10 | 3 | 10 |
| Z | 3 | - | 3 |

A-பெறப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கைக்குரிய உறுப்பினர்களின் எண்ணிக்கை. B-வட்டாரங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை. C- உள்ளூராட்சி அதிகார சபைக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை

அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி அல்லது சுயேட்சைக்குழு பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கைக்கு விகிதசமமாக உரிததாகியுள்ள உறுப்பினர்களின் எண்ணிக்கையிலும் பார்க்க கூடுதலான உறுப்பினர்கள் அக்கட்சியிலிருந்து அல்லது சுயேட்சைக் குழுவிலிருந்து வட்டாரங்களுக்கு தேர்ந்தெடுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவ் உள்ளூராட்சி சபையில் தொங்கு ஆசனம் அல்லது மேன்மிகை ஆசனம் ஏற்படும்.

### 4. பெண் உறுப்பினர்கள் எண்ணிக்கையைத் தீர்மானித்தல்

குறித்த உள்ளூராட்சி அதிகார சபை நிர்வாகப் பிரதேசத்திற்காகப் போட்டியிடும் அனைத்து அரசியற் கட்சிகளும், சுயேட்சைக் குழுக்களும் பெற்றுக் கொண்டுள்ள வாக்குகள் மொத்த வாக்காளர் எண்ணிக்கையின் 20 சதவீதத்திற்கும் குறைவாக இருப்பினும், கட்சிகளது மூன்று உறுப்பினர்கள் அல்லது அதற்கும் குறைவான உறுப்பினர்கள் பெற்ற வாக்குகள் குறைவாக இருப்பினும் அவற்றைக் கழித்து எஞ்சியுள்ள அதிகப்படியான வாக்குகள் பெற்ற உறுப்பினர்கள் குறித்த உள்ளூர் அதிகார சபைக்குத் தெரிவு செய்யப்படுவர். (25 சதவீதமான எண்ணிக்கைக்குச் சமமான எண்ணிக்கை) பிரிக்கப்பட்டு வரும் சராசரி எண்ணிக்கையால் குறித்த கட்சிகள் பெற்ற மொத்த வாக்குகளின் எண்ணிக்கையைப் பிரித்து வரும் எண்ணிக்கையின் அடிப்படையில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்படும்.

உதாரணம் - மேலே குறிப்பிடப்பட்ட A என்னும் உள்ளூராட்சி சபை தொடர்பான தேர்தல் முடிவுகளின் அடிப்படையில் ஒவ்வொரு கட்சியும் பெற்றுக் கொண்ட வாக்குகளின் சதவீதமும் உறுப்பினர்களின் எண்ணிக்கையும் பின்வருமாறு அமையும். கட்சி X - பெற்ற வாக்குகள் 27938, சதவீதம் 48.55, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 13, கட்சி Y - பெற்ற வாக்குகள் 23274, சதவீதம் 40.44, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 10, கட்சி Z - பெற்ற வாக்குகள் 6327, சதவீதம் 10.99, தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்கள் 3 ஆகும்.

இதன் பிரகாரம் பெண் உறுப்பினர்களைத் தெரிவு செய்யப்படும் போது X,Y ஆகிய இரண்டு கட்சிகளும் பெற்றுக் கொண்ட வாக்குகள் மாத்திரமே கணக்கில் எடுக்கப்படும்.

இதன் அடிப்படையில் X, Y ஆகிய கட்சிகள் பெற்றுக் கொண்ட வாக்குகளின் கூட்டுத்தொகை (27938+23274), 51212 ஆகும்.

தெரிவு செய்யப்பட வேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை கணிக்கப்படும் விதம் அட்டவணை- 10 காட்டப்பட்டுள்ளது. அதாவது கட்சி X (தமது கட்சியில் வட்டாரத்தில் தெரிவுசெய்யப்பட்ட பெண் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக) குறைந்தது 3 பெண் உறுப்பினர்களையும் கட்சி Y (தமது கட்சியில் வட்டாரத்தில் தெரிவுசெய்யப்பட்ட பெண் உறுப்பினர்கள் உள்ளடங்கலாக) குறைந்தது 2 பெண் உறுப்பினர்களையும் நியமிக்க வேண்டும்.

**தவிசாளர் / துணைத் தவிசாளர் அல்லது முதல்வர்/ பிரதி முதல்வர் ஆகியோர் எவ்வாறு தெரிவு செய்யப்படுகின்றனர்?**

ஏதேனுமொரு அரசியற் கட்சி அல்லது சுயேட்சைக் குழு குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 50 சதவீதமானவற்றில் வெற்றி பெற்றிருந்தால் அவ்வரசியற் கட்சியின் செயலாளருக்கு அல்லது சுயேட்சைக் குழுத் தலைவருக்கு இப்பதவி நியமனங்கள் தொடர்பாக தீர்மானிக்க முடியும்.

எந்தவொரு அரசியற் கட்சியும் அல்லது சுயேட்சைக் குழுவும் குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கையின் நூற்றுக்கு 50 சதவீதமான எண்ணிக்கை பெறத் தவறியிருந்தால் குறித்த உள்ளூராட்சி அதிகார சபையின் ஆரம்பக் கூட்டத்தொடரின் போது அங்கு சமூகமளித்திருக்கும் உறுப்பினர்களிடையே நடாத்தப்படும் வாக்கெடுப்பின் மூலம் மேற்படி நியமனங்கள் செய்யப்படலாம்.

முதலாவது கலப்பு முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் 2018 பெப்ரவரி 10 இல் இடம்பெற்றன. இத்தேர்தலில் 15.8 மில்லியன் வாக்காளர்கள் 341 உள்ளூராட்சி சபைகளில் (24 மாநகரசபைகள், 41 நகரசபைகள், 276 பிரதேச சபைகள்) இருந்து 8,356 உறுப்பினர்களைத் தெரிவு செய்ய வாக்களிக்கத் தகுதிபெற்றிருந்தனர். இம் முறைப்படி, 60% (5092) உறுப்பினர்கள் வட்டாரங்களில் இருந்து நேரடியாகவும், 40% (3264) உறுப்பினர்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்தல் முறையிலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இத்தேர்தல்களில் 70% வாக்காளர்கள் வாக்களித்தனர். பெரும் வன்முறைகள் எதுவுமின்றி வாக்களிப்புகள் இடம்பெற்றன.

| அட்டவணை -10 | நியமிக்கப்படவேண்டிய பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கை |
|---|---|
| 25% வீத (பெண்)உறுப்பினர்கள் எண்ணிக்கை | (26/4) = 6.5 |
| சராசரி | (51212/6.5) = 7878.76 |
| X கட்சி நியமிக்கும் பெண் உறுப்பினர்கள் | (27798/7878.76) =3.5 = 3 பெண் உறுப்பினர்கள் (தசம தானத்தைக் கருத்திற் கொள்ளாத முழு எண்) |
| Y கட்சி நியமிக்கும் பெண் உறுப்பினர்கள் | (23274/7878.76) =2.95 = 2 பெண் உறுப்பினர்கள் (தசம தானத்தைக் கருத்திற் கொள்ளாத முழு எண்) |

341 உள்ளூராட்சி சபைகளுள் 206 உள்ளூராட்சி சபைகளில் 385 தொங்கு ஆசனங்கள் உருவாகி இருந்தன. மிகுதி 136 உள்ளூராட்சி சபைகளில் தொங்கு ஆசனங்கள் இல்லை. இவை பற்றி பகுதி II இல் பார்ப்போம்.

## கரையொதுங்கிய மிதவையிலிருந்து 18 புத்தர் சிலைகள் மருதங்கேணி பொலிஸாரால் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கரையொதுங்கிய மிதவையில் காணப்பட்ட 18 புத்தர் சிலைகளையும் மருதங்கேணி பொலிஸார் மீட்டு பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் கடற்கரையில் நேற்று முன்தினம் புதன் கிழமை அதிகாலை வேளை மிதவை ஒன்று கரையொதுங்கி இருந்தது.

குறித்த மிதவையில் புத்தர் சிலைகள், தேங்காய்கள் உள்ளிட்ட பொருட்கள் காணப்பட்ட நிலையில் அதனை பொலிஸார் மீட்டுள்ளனர். (6-33)

## பால்குடப்பவனி

(யாழ்ப்பாணம்)

தைப்பூச தினமான எதிர் வரும் பெப்ரவரி மாதம் 11 ஆம் திகதி தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் தலைவாசல் கோபுர முன்றலில் இருந்து பிற்பகல் 2.30 மணிக்கு மாவைக் கந்தன் ஆலயத்தை நோக்கி பால்குடப் பவனி நடைபெறவுள்ளது.

இப் பால்குடப்பவனியில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் 077 369 1392 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகத் தொடர்பு கொள்ளுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் அறிவித்துள்ளனர். (6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணக்...

கோட்டையைப் பல்வேறு பரிணாமங்களில் அழகுபடுத்தி எதிர்காலத்தில் அதன் ஊடாக வருமானம் ஈட்டும் பொறிமுறைக்கு ஏற்றவாறு நகர அபிவிருத்தி அதிகார சபையால், தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

அதற்கான நிதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் இந்தத் திட்டத்தை எப்படி முன்னெடுக்கலாம் என்பது தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

தொல்பொருள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் இந்த மாதம் யாழ்ப்பாணம் வருகைதரும்போது இது தொடர்பில் இறுதி முடிவெடுக்கத் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை கோட்டையைச் சுற்றியுள்ள அதன் எல்லைப் பகுதியை அடையாளப்படுத்தி வாகனங்கள் உள்நுழையமுடியாதவாறு மதில்கள் அமைக்கப்படுவதுடன், 5 நுழைவாயில்கள் ஊடாக மாத்திரமே உள்நுழைய அனுமதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் தொல்பொருள் திணைக்களத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் சங்கிலியன் பூங்காவை அழகுபடுத்தி சிறுவர்களுக்கான பூங்காவாக அமைப்பது தொடர்பில் ஆராயப்பட்டது. அதற்கான நடவடிக்கைகளை கட்டம் கட்டமாக மேற்கொள்வதற்குக் கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது. (ம-7)

## துப்பாக்கிச்...

கிறேன் என சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேலும் தெரிவிக்கையில்,

2025ஆம் ஆண்டின் ஆரம்பத்துடன், கடந்த 16 நாட்களில் மாத்திரம் 05 துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் பதிவாகியிருப்பது பாரதூரமான நிலைமை என்பதை நான் முதலில் சுட்டிக்காட்டுகின்றேன்.

இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் உயிரிழந்து, மேலும் நான்கு பேர் காயமடைந்துள்ளனர். இவ்வாறானதொரு சூழ்நிலையில் நாட்டின் சிவில் பிரஜைகள் தமது அன்றாட நடவடிக்கைகளை சுதந்திரமாக மேற்கொள்வதில் நிச்சயமற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

மன்னார் நீதவான் நீதிமன்ற வளாகத்திற்கு முன்பாக இன்று (நேற்று) வியாழக்கிழமை இருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் ஒன்று பதிவாகியுள்ள நிலையில், இவ்வாறான பரிதாபகரமான சம்பவங்களைத் தடுத்து நிறுத்துவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் நான், ஜனாதிபதி தலைமையிலான தற்போதைய அரசாங்கத்துக்கும் மற்றும் அனைத்துப் பாதுகாப்புப் படைப் பிரதானிகளிடமும் தயவுகூர்ந்து கேட்டுக்கொள்கிறேன்.

இந்நிலை அதிகரிக்குமானால், அது சாதாரண மக்களின் வாழ்க்கையைக் கொண்டு செல்வதற்கும், மக்களுக்குச் சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும் தடங்கலான காரணமாக இருக்கும் என்பது எனது கருத்தாகும் என்று தெரிவித்துள்ளார். (ம-7)

## ஜனாதிபதி...

சினோபெக் முன்னணி சர்வதேச பெற்றோலிய நிறுவனத்திற்கும் இடையில் கைசாத்திடும் நிகழ்வு நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த 3.7 பில்லியன் டொலர் வெளிநாட்டு நேரடி முதலீட்டின் கீழ் அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்படும் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 02 இலட்சம் கொள்ளளவுடைய எண்ணெய்த் தாங்கிகளைக் கொண்டுள்ளதுடன், அவற்றில் பெருமளவான தொகையை ஏற்றுமதி செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.

சீனாவிடமிருந்து இலங்கைக்குக் கிடைத்த இந்த புதிய முதலீடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துவதுடன் அம்பாந்தோட்டையின் குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தையும் பலப்படுத்தும். அத்துடன் முழு இலங்கை மக்களுக்கும் இதன் பலன் மிக விரைவில் கிடைக்கப்பெறும் என ஜனாதிபதியின் சீனப் பயணத்தில் இணைந்துகொண்ட அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார். (ம-7)

## தொழில்...

நடுத்தர, பெரிய அளவிலான தொழில் முனைவோருக்கு நிவாரணம் வழங்குவதற்காக அரசாங்கம் ஒரு நிவாரணப் பொதியை அறிமுகப்படுத்தியுள்ளது.

சிறு மற்றும் நடுத்தர தொழில் முனைவோர் மார்ச் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் தொடர்புடைய வங்கிகளுக்குச் சென்று தங்களுக்குக் கிடைக்கும் நிவாரணம் குறித்துக் கலந்துரையாடலாம் என்றும் நிதி அமைச்சு கூறியுள்ளது.

டிசம்பர் 15, 2024 நிலைவரப்படி நிலுவையில் உள்ள மொத்தக் கடன் தொகையின் அடிப்படையில் மூன்று பிரிவுகளின் கீழ் சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோருக்கு சிறப்பு நிவாரணம் வழங்கப்படும் என்றும் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ரூ.25 மில்லியன் குறைவான கடன்களைப் பெற்றுள்ளவர்களுக்கு 12 மாத கால அவகாசமும், ரூ.25 மில்லியன் முதல் ரூ.50 மில்லியன் வரையிலான கடன்களுக்கு ஒன்பது மாத கால அவகாசமும், 50 மில்லியனுக்கும் அதிகமான கடன்களுக்கு ஆறு மாத கால அவகாசமும் வழங்கப்படும் என்று நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், செலுத்த வேண்டிய மொத்த மூலதனத் தொகையின் அடிப்படையில், சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான செலுத்தப்படாதவட்டியை 65 சதவீதம், 40 சதவீதம் போன்ற வற்றால் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

அத்தோடு, இந்தத் தொழில்முனைவோருக்கு மூலதனக் கடன்களை வழங்குதல் மற்றும் பாதகமான கடன் நிலைமைகளுக்கு நிவாரணம் உள்ளிட்ட பல சலுகைகள் வழங்கப்படும் என்று நிதி அமைச்சகம் வலியுறுத்தியுள்ளது.

இந்த நிலையில், நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சிறு மற்றும் நடுத்தர தொழில்முனைவோர் துறை ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமாகப் பங்களிப்பதாக நிதி அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## இரு மாணவர்...

மோட்டார் சைக்கிள் ஒன்று பஸ் ஸூடன் மோதியதில் இந்த விபத்து சம்பவத்துள்ளது.

நொச்சியாகமவில் இருந்து கண்டி நோக்கிப் பயணித்த தனியார் பஸ் ஸொன்றுடன் குறித்த மாணவர்கள் சென்ற மோட்டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானது.

உயிரிழந்த இரண்டு பாடசாலை மாணவர்களும் 16 வயதுடையவர்கள் என்று காலதிவுல்வெவப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

## வடக்கு மீனவர்...

களுக்கும் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

இன்று காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.00 மணி வரை 23.2NM north east of ppd, Coordinate (s)of the location, 09°55' N:080°42E, 09°55 N:080°36E, 09°51N:080°42E, 09°51N: 080°36E. ஆகிய கடற்பரப்புக்களில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாமெனமீனவர்களுக்கு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. (ம-7)


### மஹஜன சம்பத
திகதி 2025.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 5718
A 7 2 8 1 0 9
அத சம்பத A 8 1 0 9
சீட்டிழுப்பு இலக்கம் 0293
National Lotteries Board

### தன நிதானய
திகதி - 2025.01.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1748
M 09 18 52 75 M
Double Chance 20085

### மெகா பவர்
திகதி 16/01/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2066
B 12 02 36 58 68

### லக்கி 7 VIP
திகதி 2025.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 544
P 9 4 6 6 4 4 P

### கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3960
சீட்டிழுப்பு திகதி 16.01.2025
R 10 12 35 72
R

### ஹந்தஹன HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2025.01.16
சீட்டிழுப்பு இலக்கம் 1027
கடகம் 04 06 10 62 கடகம்
18379 13

### உத்தியோகபூர்வ முடிவுகள் — சுபிரி வாசனா
16.01.2025 வெற்றி வாரம் 426
C 3 8 7 8 9 5
69427
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.29,246,696.40
DLB

### SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2692
சீட்டிழுப்பு திகதி 2025.01.16 தினம் வியாழக்கிழமை
02 16 35 36 P
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,273,416.80

### சனிதா
திகதி 16.01.2025 வெற்றி வாரம் 4853
32 46 60 61 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 50,000,000.00
63831

### சசிரி
601 16.01.2025 வியாழக்கிழமை
04 32 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

### ரசி
சீட்டிழுப்பு வாரம் 4404
சீட்டிழுப்பு திகதி 16.01.2025 தினம் வியாழக்கிழமை
05 17 28 38 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,784,443.60
139506

### கப்றக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
1868 16.01.2025 வியாழக்கிழமை
M 34 02 04 36 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.562,074,654.80

### அத கோடிபதி ADA KOTIPATHI
வியாழக்கிழமை
வெற்றி வாரம் : 2518
சீட்டிழுப்பு திகதி : 2025.01.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.63,277,888.00
08 29 37 58 B
232673


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## GROUP CLASSES

தரம் 6 - 11
ஆங்கில, தமிழ் மொழி மூல வகுப்புகள்

- குறைந்த எண்ணிக்கையான மாணவர்கள்
- வாராந்த, மாதாந்த பயிற்சிப் பரீட்சைகள்
- சிரேஷ்ட, அனுபவமிக்க ஆசிரியர் குழாம்
- விரும்பிய பாடத்தெரிவு

(C-2061)

ஆரம்பம் : 18.01.2025
சனிக்கிழமை

தரம் 6,7,8 - 10.00 am
தரம் 9,10,11 - 6.00 am

NEWTON, NALLUR
TCT Supermarket அருகில்
077 792 3653



## NEWTON, NALLUR

தரம் 6 [2025]
ஆங்கில, தமிழ் மொழி மூல வகுப்புகள்

ஆரம்பம் 18.01.2025
சனிக்கிழமை 8.00 am

- தமிழ்
- கணிதம்
- விஞ்ஞானம்
- ஆங்கிலம்
- வரலாறு
- புவியியல்
- குடியுரிமை
- சுகாதாரம்
- ICT
- சிங்களம்

(C-2061)

18/18, வைமன் வீதி, நல்லூர்
TCT Supermarket அருகில்
077 792 3653



## யாழ்ப்பாணம் - சென்னை விமான சேவைகள்

யாழ் - சென்னை விமானப் பயணச் சீட்டுக்கள்
விசேட விலையில்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.
மற்றும் அனைத்து நாடுகளுக்குமான ரிக்கற்றுக்களை எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.

APEX TRAVELS
0777 597 598, 076 3333 644
இல.105/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். CTB பஸ் தரிப்பிடத்திற்கு அருகில்)
(749)


## தூய்மையான...

பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

ஜனாதிபதி டிரம்ப் அமெரிக்கா ஜனாதிபதியாக பதவியேற்க தயாராகி வரும் நிலையில், இலங்கைக்கான அமெரிக்க தூதர் பொறுப்பிலும், இந்த வருட இறுதியில் மாற்றம் ஏற்படும் என்று இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சங் கூறியுள்ளார்.

இந்தநிலையில், நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார கலாசாரத்தை மீட்டமைப்பதை நோக்கமாகக் கொண்ட "தூய்மையான இலங்கை" திட்டத்தையும் அமெரிக்க தூதுவர் பாராட்டி பேசியுள்ளார். (ம-7)


## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், அரச, தனியார் துறை, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக் கணக்கில் எம்மிடம் உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்கள் உடன் தரப்பட்டு, துரிதமாகத் திருமணம் நிறைவேற்றித் தரப்படும்.
(3040)

198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)
077 138 7596, 071 999 9306



## கணக்கீடு

A/L 2025 கம்பனி ஆரம்பம் நாளை 9 A.M
A/L 2026 கட்டுப்பாட்டுக் கணக்கு ஆரம்பம் நாளை 11 A.M

S.தவா
B.Com(Hons) (Acc.Spl) PGDE M.A in Edu

DCM - யாழ். நகர்
யா/வேம்படி மகளிர் கல்லூரி அருகில்
T.P : 077 239 5858
(C-1997)



## V2 VISA SERVICES

கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS

விமான பயணச்சீட்டுக்கள்

- Student Visas
- Online Appointments
- இந்திய Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-2056)



## தரம் 6

ENGLISH & MATHS GROUP CLASSES
By : P.MATHAN
ஆரம்பம் : 18.01.2025
சனிக்கிழமை 8.00am
18/18, Wyman Road, Nallur.
077 792 3653
(C-2061)



## வாடகைக்கு

யாழ். ஸ்ரான்லி வீதியில் அலுவலகங்களுக்கு ஏற்ற வகையில் 1ம். 2ம் மாடி (4000 சதுர அடி) வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு:
076 3156 470
(C-2053)



## காணி உடன் விற்பனைக்கு

காங்கேசன்துறை (KKS) நகுலேஸ்வரா வீதியில் பஸ் ஓடும் வீதி முகப்புடன் நிலப்பரப்பு 10 காணி உடன் விற்பனைக்கு உண்டு
வீடுகள், களஞ்சிய அறைகள், கடைகள், யாட் கட்டுவதற்கு உகந்த இடம்.
076 4499 868
(3039)



## X MARD

கோப்பாய், மருதனார்மட கிளைகளில்
இதே விலைகளில் பொருட்களை கொள்வனவு செய்ய முடியும்.

| | | | |
|---|---|---|---|
| Rs. 229.00 Bulk Max 2kg வெள்ளைச் சீனி | Rs. 159.00 Bulk Max 2kg கோதுமை மா | Rs. 389.00 மஞ்சள் பருப்பு | Rs. 749.00 Bulk செத்தல் மிளகாய் |
| Rs. 979.00 Max 1 PCS Anchor 400g | Rs. 289.00 Bulk ரவை | Rs. 49.00 ~~80~~ Anchor Yoghurt | Rs. 1749.00 Max 1 PCS ~~2100~~ Protinex |
| Rs. 339.00 ~~425~~ Vim Liquid | Rs. 2499.00 ~~3000~~ Vitagen Vannila | Rs. 339.00 ~~380~~ Sunlight Powder Rose | Rs. 1129.00 ~~1190~~ Anchor Plus |
| Rs. 139.00 ~~175~~ Santoor Soap | Rs. 399.00 ~~480~~ Chick Shampoo | Rs. 2999.00 ~~3335~~ Diabeta Plus | Rs. 349.00 ~~500~~ Ocean Star Mackerel |
| Rs. 919.00 5kg ~~1150~~ Prima Wheat Flour | Rs. 3349.00 Max 1 PCS ~~3900~~ Sustagen 400g | Rs. 149.00 ~~200~~ Noodles | Rs. 349.00 ~~400~~ Pepsi 1.5L |
| Rs. 199.00 ~~270~~ Fems 10 Pcs Pads | Rs. 799.00 ~~1200~~ Marvel 16 Pcs | Rs. 459.00 ~~698~~ Cute Baby Wipes | Rs. 2699.00 ~~3000~~ Vijitha 10Kg |

மானிப்பாய் வீதி, கோப்பாய் வடக்கு, கோப்பாய்.
(கோப்பாய் பிரதேச வைத்தியசாலைக்கு அருகாமையில்)
074 2327 545

மருதனார்மடம் (யாழ். இராமநாதன் கல்லூரிக்கு முன்பாகவும், வட இலங்கை சங்கீத சபைக்கு அருகிலும்)
074 1011 345
(C-2057)


## 31 ஆம் நினைவுநாள் அழைப்பு



அன்னை மடியில்
30 . 10 . 1946

மரி அன்னையின் மடியில்
14 . 12 . 2024

அமரர் சந்தியாப்பிள்ளை அன்ரன் செல்வராசா
(நெல்லியடி மொடோர்ன் ஸ்ரோர்ஸ் உரிமையாளர்)

அவர்களின் 31ம் நாள் நினைவுதினம் நாளை 18.01.2025 சனிக்கிழமை காலை 11.30 மணிக்கு கரவெட்டி புனித பரலோகமாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். பின்பு எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

உச்சிலம்மன் கோவிலடி,
கரணவாய் கிழக்கு, கரவெட்டி

இங்ஙனம்:
குடும்பத்தினர்

(C-2059)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
1968 . 04 . 14

மறைவு
2011 . 01 . 23

அமரர் இரத்தினம் ஸ்ரீதரன்

ஆலமரமொன்று அடிசாய்ந்ததோ - பாரோடு
தவிக்கவிட்டு பாதியிலே போனதேனோ?
பதின்நான்காண்டுகள் நகர்ந்து விட்டன
என் உயிர் மூச்சு உள்ளவரை உன் நினைவுகள்
எனை விட்டு பிரியாது - தம்பி!

செட்டியார் வளவு,
பழைய பொலிஸ் நிலைய வீதி,
சுன்னாகம்.

தகவல்:
இ.மதிவதனி (அக்கா)

(747)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.